வானவில்

VAANAVIL

இதழ் 155 | கார்த்திகை 2023

ISSUE 155 | NOVEMBER 2023

# வரவு செலவுத் திட்டம் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்குமா?




**இ**லங்கையின் நிதியமைச்சர் பதவியையும் கூடவே வகிப்பதால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்த்திருக்கின்றார். அவர் ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற பின்னர் சமர்ப்பிக்கும் இரண்டாவது வரவு செலவுத் திட்டம் இதுவாகும்.

தனது வரவு செலவுத் திட்டம் புத்தர் காட்டிய வழியில் அமைந்திருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். (புத்தர் உலக வாழ்வியல் விடயங்கள் குறித்து கருத்துச் சொல்லியிருக்கிறார் என்பதை நாம் அறிவோம். ஆனால் பொருளாதார விடயங்கள் குறித்தும் கருத்துச் சொல்லியுள்ளார் என்ற விடயத்தை எமது ஜனாதிபதி சொல்லித்தான் அறிய முடிகிறது!)

ஜனாதிபதி ரணிலின் கூற்றைப் பார்க்கும் போது, அவரது மாமனார் ஜே.ஆர்.ஜெயவர்த்தன 1977 இல் ஆட்சிக்கு வந்தபோது (அவரது அரசில் ரணிலும் ஒரு அமைச்சராக இருந்தார்) ஆற்றிய உரைதான் நினைவுக்கு வருகிறது. அந்த நேரத்தில் ஜே.ஆர். தான் புத்தரின் தர்ம போதனையின்படி ஆட்சி செய்யப் போவதாக அறிவித்தார். அதனால் அவருக்கு "தர்மிஸ்டர்" (உண்மையில் தம் இஸ்டர்) என்ற பட்டப்பெயரும் கிடைத்தது. ஆனால் இறுதியில் ஜே.ஆர். தனது 17 வருட ஆட்சியில் நாட்டை எங்கே கொண்டுபோய் விட்டார் என்பதை முழு உலகமும் அறியும். அந்த மாதிரி ரணிலும் நாட்டை அழிவில் கொண்டுபோய் விடாமல் இருந்தால் பெரிய காரியம்.

நாட்டின் தேசிய வருமானத்துக்கும் செலவீனத்துக்கும் இடையில் மிகப்பெரிய இடைவெளி இருப்பதைச் சுட்டிக் காட்டிய ஜனாதிபதி, இலங்கை சுதந்திரமடைந்த நாளிலிருந்து கடந்த 75 ஆண்டுகளாக இந்த நிலைமை நீடிப்பதாகவும் விசனம் தெரிவித்திருக்கிறார். ஆனால் இந்த நிலைமை எவ்வாறு ஏற்பட்டது என்பதை அவர் விளக்க முற்படவில்லை. அதற்கான காரணம் அவருக்குத் தெரியும் என்றாலும், அதை விளக்க முற்பட்டால், தான் உட்பட முழு முதலாளித்துவ அரசியல்வாதிகளையும், முதலாளித்துவ அமைப்பு முறையையும் அது தாக்கும் என்பது அவருக்குத் தெரியும்.

அவர் குறிப்பிடும் 75 வருடங்கள் எனும் போது, அவருடைய ஐக்கிய தேசியக் கட்சியும் பல தடவைகள் ஆட்சி அதிகாரத்தில் இருந்துள்ளதையும் அது குறிக்கும். அப்படிப் பார்க்கையில் 2000 ஆண்டிலும், 2015 ஆம் ஆண்டிலும் ரணில் விக்கிரமசிங்கவும் இரு தடவைகள் பிரதமராகப் பதவி வகித்ததையும் கூட அது உள்ளடக்கும். எனவே, அவர் கடந்தகால அரசாங்கங்கள் பற்றி குறிப்பிடும் போது தனது கட்சி (ஐ.தே.க.) அரசாங்கம் விட்ட தவறுகளை முதலில் சுய விமர்சன ரீதியாக ஆராய வேண்டும்.

ஆனால், சில தினங்களுக்கு முன்னர் இருவேறு வைபவங்களில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க, இலங்கையின் தேசபிதா என்று குறிப்பிடப்படும் சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமர் (அன்றைய ஐ.தே.க. தலைவர்) டி.எஸ்.சேனநாயக்கவின் பொருளாதாரக் கொள்கைகளையும், பின்னர் 1977 இல்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

# தோழர் என் சங்கரய்யா: எட்டு தசாப்தகால மக்கள் பணிக்கு நிரந்தர ஓய்வு



இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும் இந்திய சுதந்திர போராட்ட வீரருமான தோழர் என். சங்கரய்யா 15.11.2023 இல் காலமானார். 1921 ஆம் ஆண்டு ஜுலை 15ஆம் திகதி தூத்துக்குடியைச் சேர்ந்த ஆர்த்தூரில் பிறந்த சங்கரய்யாவுக்கு, பெற்றோர் இட்டபெயர் பிரதாபசந்திரன்.

இந்திய தேசத்தின் அரசியல் விடுதலையோடு, இந்திய மக்கள் சமுதாய விடுதலையையும் அடைய வேண்டுமென்பதை இலட்சியமாகக் கொண்டு சங்கரய்யா 1940 இல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார். அக்காலகட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாட்டில் தடை செய்யப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இத்தடை 1942 ஜுலையிலேயே நீக்கப்பட்டது. இவர் 83 வருட காலம் தொடர்ச்சியாக கம்யூனிஸ்ட் கட்சியில் அர்ப்பணிப்போடு பணியாற்றியுள்ளார்.

1964 ஆம் ஆண்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கிய 32 தலைவர்களில் சங்கரய்யாவும் ஒருவர். இவர் கம்யூனிஸ்ட் இயக்கத்தினுடைய முதல் தலைமுறைத் தலைவர்களான பி.ராமமூர்த்தி, ப.ஜீவானந்தம், சீனிவாச ராவ், கே.பி.ஜானகியம்மாள் போன்றவர்களோடு இணைந்து பணியாற்றிருக்கிறார். தமிழ்நாட்டில் பட்டி தொட்டியெங்கும் கம்யூனிச இயக்கத்தை கட்டி வளர்ப்பதில் மிகப் பெரும் பங்காற்றியுள்ளார்.

1937 இல் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் மாணவராக இணைந்த சங்கரய்யா, நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்றார். அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து உரையாற்றியதற்காக, 1941 இல் பட்டப் படிப்பு இறுதிப் பரீட்சைக்கு 15 நாட்களுக்கு முன்னதாகக் பொலிசார் அவரைக் கைது செய்தனர். இதன் காரணமாகவே அவரால் பட்டப்படிப்பை நிறைவு செய்ய முடியவில்லை.

1942 இல் விடுதலையாகிய சங்கரய்யா மீண்டுமொரு தடவை கைது செய்யப்பட்டு 1944 இல் விடுவிக்கப்பட்டார். பின்னர் 1946 இல் மதுரை சதி வழக்கொன்றில் அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு, இந்தியா சுதந்திரமடைந்த தினமாகிய 1947 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 14ஆம் திகதி விடுவிக்கப்பட்டார். இந்தியா சுதந்திரமடைந்த பின்னரும் பல போராட்டங்களின் போது அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். மொத்தமாக சுமார் 8 ஆண்டுகளை சிறையினுள்ளும், மூன்று ஆண்டுகளை தலைமறைவாகவும், அவர் தனது வாழ்க்கையை கழித்துள்ளார்.

1967, 1977, 1980 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சங்கரய்யா, மொத்தம் 11 ஆண்டுகள் சட்டமன்ற உறுப்பினராகச் செயல்பட்டுள்ளார். சட்டமன்றத்தில் பல முக்கியப் பிரச்சினைகள் குறித்து பிரசித்துவம் வாய்ந்த ஏராளமான உரைகளை நிகழ்த்தியுள்ளார்,

1967 ஆம் ஆண்டு சங்கரய்யா சட்டமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தபோது ஆட்சிமொழித் தீர்மானம் முன்மொழியப்பட்டது. அதன் மீது சட்டமன்றத்தில் நடந்த விவாதத்தில் பேசிய சங்கரய்யா, “தமிழ் மொழி நீதிமன்ற மொழியாக, நிர்வாக மொழியாக, பாடசாலை மொழியாக வர வேண்டும். ஆட்சிமொழி என்பதன் பொருள் அதுதான். ஆனால், அப்படி வர வேண்டும் என்று மட்டும் தீர்மானம் நிறைவேற்றினால் போதாது. இதையெல்லாம் அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் அமுலாக்குவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் உள்ளடக்கியே தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்” என்று கோரிக்கை விடுத்தார். இதனை அன்றைய முதலமைச்சர் அண்ணா முழுமனதாக ஏற்றுக்கொண்டார். அதன்படி சட்டசபையில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வாரப்பத்திரிகையான ‘ஜனசக்தி’ மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரபூர்வ ஏடான ‘தீக்கதிர்’ நாளிதழின் ஆசிரியராகவும் ‘செம்மலர்’ இலக்கிய மாத இதழ், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் – கலைஞர்கள் சங்கம் ஆகியவற்றின் உருவாக்கத்துக்கு பிரதான காரணகர்த்தாகவும் சங்கரய்யா இருந்திருக்கிறார்.

சென்னையில் 15.08.2021 இல் நடைபெற்ற இந்திய விடுதலை நாள் விழாவில் தமிழ்நாட்டுக்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியவர்களை பெருமைப்படுத்தும் வகையில் தமிழ்நாடு அரசின் ‘தகைசால் தமிழர்’ விருது, முதல் முறையாக சங்கரய்யாவுக்கு அவரது நூறாவது பிறந்தநாளின் போது வழங்கப்பட்டது

சங்கரய்யா மாணவப் பருவத்திலேயே பொது வாழ்வில் நுழைந்து, தொடர்ச்சியாக நாட்டுக்காகவும், உழைக்கும் வர்க்கத்திற்காகவும், தீண்டாமைக்கு எதிரான போராட்டத்திலும் ஏராளமான தியாகங்களைப் புரிந்து, நெடுவாழ்வு வாழ்ந்து மறைந்துள்ளார். அவரது வாழ்வும் தியாகமும் என்றென்றும் போற்றுதலுக்குரியவை.

தோழர் சங்கரய்யாவின் மறைவால், இந்திய கம்யூனிஸ்ட் இயக்கம் உன்னதமான பண்புகள் கொண்ட ஒரு மகத்தான தலைவரை இழந்திருக்கின்றது. அவரது மறைவுக்கு ‘வானவில்’ பத்திரிகை சிரந்தாழ்த்தி தனது செவ்வஞ்சலியை செலுத்தி நிற்கின்றது.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

‘வானவில்’ இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து ‘வானவில்’ இதழ்களையும் வாசிக்கலாம்.

# ரோம் சமாதான மாநாட்டின் பிரகடனம்




**இ**த்தாலி தலைநகர் ரோமில் (Rome) ஒக்ரோபர் 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் 25 நாடுகளைச் சேர்ந்த அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் 200 பேர் வரை கலந்து கொண்ட சமாதான மாநாடு ஒன்று நடைபெற்றது. அந்த மாநாட்டின் முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கையின் சாராம்சம் வருமாறு:

அமெரிக்காவினதும் அதன் மேற்கத்தையக் கூட்டாளி நாடுகளினதும் ஆக்கிரமிப்புக் கொள்கைகளே உக்ரைனிலும், பாலஸ்தீனத்திலும் உருவாகியுள்ள நிலைமைகளுக்கு அடிப்படைக் காரணங்களாகும். இது மூன்றாம் உலகப் போரை நோக்கி உலகைத் தள்ளும் நிலைமையை உருவாக்கியுள்ளது.

ஒற்றை உலக ஒழுங்கைப் பேணுவதன் மூலம் ஏகாதிபத்திய ஆதிக்கத்தை நிலைநாட்டுவதே மேற்குலகின் நோக்கமாகும். இதன் நோக்கம் பெரும்பாலான நாடுகளை அடிமை நிலைக்குத் தள்ளுவதன் மூலம் நவ காலனித்துவ சர்வதேச அமைப்பை நோக்கிச் செல்வதாகும்.

ஏகாதிபத்திய சக்திகளின் நோக்கம், “ஜனநாயக உலகமயமாக்கம்” என்ற போலியான முகமூடியை அணிவதன் மூலமும், மனிதவுரிமை மற்றும் சிவில் உரிமைகளைப் பாதுகாப்பது என்று கூறுவதன் மூலமும், பல நாடுகளில் தங்களது ஆதிக்கத்தைக் கொண்டு வருவதாகும். அவர்கள் தமது பொருளாதார நோக்கத்துக்காக ஐரோப்பிய யூனியன், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக பொருளாதார அரங்கு (World Economic Forum) என்பனவற்றையும், இராணுவ ஆதிக்கத்துக்காக நேட்டோவையும் (Nato) பயன்படுத்துகின்றனர்.

**மேற்குலகின் இந்தக் கட்டமைப்பின் கீழ் அவர்களது நோக்கம்:**

ரஸ்யாவை தாக்கி அழித்து, அதன் சுயாதீனத்தைச் சிதைத்து, அங்கு பல அடிமை அரசுகளை உருவாக்குவதாகும்.

சீனாவை இராணுவத் தளங்கள், யுத்தக் கப்பல்கள், இராணுவக் கூட்டணிகள் மூலம் சுற்றி வளைப்பதன் மூலமும், தாய்வானுக்கு ஆயுதங்கள் வழங்குவதன் மூலமும், தென்சீனக் கடலில் அத்துமீறல்களைச் செய்வதன் மூலமும், சீனாவைப் போருக்குத் தள்ளுவதாகும். அத்துடன் கொரிய தீபகற்பத்தில் போர் முஸ்தீபுகளைத் தொடர்வதுமாகும்.

இஸ்ரேலுக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் அதைப் பயன்படுத்தி மத்திய கிழக்கில் நவ காலனித்துவக் கொள்கைளை நடைமுறைப்படுத்துவதுடன், பாலஸ்தீன மக்களை நசுக்கி, ஈரானை போருக்குத் தள்ளுவதுமாகும்.

பலஸ்தீனத்தை தொடர்ந்து ஆக்கிரமித்து வைத்திருப்பதற்காக, ஈராக்கை ஆக்கிரமித்து வைத்திருப்பதைத் தொடர்வதும், யெமன் (Yemen), சிரியா, லிபியா மற்றும் லெபனான் நாடுகளில் குழப்பங்களை உருவாக்குவதுமாகும்.

ஆபிரிக்க மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளில் பொம்மை அரசுகளையும், அடிமை அரசுகளையும் உருவாக்கி, சாகெல் (Sahel) நாட்டில் செய்தது போல சுதந்திர நாடுகளில் தலையிடுவதாகும்.

ரஸ்யாவின் நோட் ஸ்றீம் – 2 (Nord Stream) எண்ணெய் குழாயை வெடிவைத்துத் தகர்த்தது போல, கூலிப்படைகளைப் பயன்படுத்தி ஆட்சி மாற்றம் செய்வது, ரஸ்ய, ஈரானிய புத்திஜீவிகள், அரசியல்வாதிகள், விஞ்ஞானிகள், ஊடகவியலாளர்களைக் கொலை செய்வதற்கான பயங்கரவாதத் தாக்குதல்களைத் திட்டமிட்டு நடத்துவதும் ஆகும்.

ஏகாதிபத்திய எதிர்ப்பைக் காட்டுகின்ற நாடுகள் மீது சட்ட விரோதமான, ஒருதலைப்பட்சமான பொருளாதார தடை நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம், அந்த நாடுகளில வாழ்கின்ற மக்களுக்கு பேரழிவுகளை ஏற்படுத்துவதுடன், மேற்கு நாடுகளில் வாழும் தொழிலாளி வர்க்க மற்றும் ஏழை மக்களுக்கும் பாதிப்புகளை உண்டாக்குவதுமாகும்.

இந்தக் காரணங்களால் மேற்குலக ஏகாதிபத்திய சக்திகள், மனித குலத்துக்கு எதிராகவும், உலக சமாதானம் மற்றும் வளர்ச்சிக்கு எதிராகவும் இருக்கின்றன என்பது தெளிவான உண்மையாகும்.

**உக்ரைனில் நடைபெறும் போரில் எமது நிலைப்பாடு:**

உக்ரைனில் இருந்த ஆட்சியை அமெரிக்கா 2014 இல் சதி நடவடிக்கைகளின் மூலம் கவிழ்த்தது. ஆனால் அதன் காரணமாக அங்கு யுத்தம் ஆரம்பமாகவில்லை. யுத்தம் ஆரம்பமானது 2022 பெப்ருவரி 24 இல் ஆகும். நேட்டோ கிழக்கு ஐரோப்பா நோக்கி தனது விஸ்தரிப்பை மேற்கொள்ள முயன்றதன் காரணமாகவே உக்ரைனில் யுத்தம் ஆரம்பமானது. ஒரு காலத்தில் பலம் வாய்ந்த பால்கன் நாடான யுகோஸ்சிலோவாக்கியா மீது போர் தொடுத்து அந்த நாட்டைச் சின்னாபின்னமாக்கியது மற்றும் காக்சசஸ் (Caucasus) பகுதிகளில் போர் தொடங்கியது எல்லாமே நேட்டோவின் இத்தகைய ஒரு திட்டத்தின் பகுதிகளாகும்.

ரஸ்யாவுக்கு எதிரான போர் மக்கள் விருப்பத்துக்கு மாறாக சோவியத் யூனியன் தகர்க்கப்பட்ட பொழுதே ஆரம்பித்துவிட்டது. அதன் பின்னர் கிழக்கு ஐரோப்பாவிலும், மத்திய ஆசியாவிலும் புதிய எல்லைகள் வகுக்கப்பட்டது சர்வதேச சட்ட

விதிகளுக்கு முரணானதாகும்.

நேட்டோ என்பது அமெரிக்கா ஐரோப்பாவைத் தனது பிடியில் வைத்திருப்பதற்கான ஒரு ஆயுதமாகும். நேட்டோவின் கிழக்கு நோக்கிய விஸ்தரிப்பு என்பது, சட்டவிரோதமானது என்பது மட்டுமல்லாமல், எல்லா சுதந்திரமான – சுயாதிபத்தியமுள்ள நாடுகளுக்கும் ஆபத்தானதுதாகும்.

ரஸ்ய அரசாங்கம் கூடுமானவரை போரைத் தவிர்க்க முயன்றபோதிலும், மேற்குலகு உக்ரைனில் உள்ள தமது பொம்மைகள் மூலம் தொடர்ந்து ரஸ்ய மக்களைக் குறி வைத்ததுடன், ரஸ்யா முன்மொழிந்த சமாதான திட்டங்களையும் நிராகரித்து வந்தது. மேற்குலகின் நடவடிக்கைகளே இந்தப் போர் ஆரம்பித்ததற்கான காரணங்களாகும்.

இந்தப் போரை மேற்குலகு ஆரம்பித்ததின் நோக்கத்தைப் பார்க்கையில், உக்ரேனியர்கள், ரஸ்யர்கள் ஆகிய இரு தரப்பினர்களுக்கும் ஆகக்கூடுதலான சேதத்தை உண்டாக்குவதற்காகவே என்பது தெரிகிறது. சட்ட விரோத ஆயுதங்களான கொத்தணிக் குண்டுகள் மற்றும் யூரேனியம் வெடி மருந்து என்பனவற்றை மேற்குலகம் போரில் பயன்படுத்துவதைப் பார்த்தால், மேற்குலகின் அளவுகணக்கில்லாத மனித விரோதத் தனமை புரியும். தமது நோக்கங்களுக்காக மேற்குலகம் உக்ரேனியர்கள் உட்பட சகல கிழக்கு ஐரோப்பிய மக்களையும் பீரங்கித் தீன்களாகப் பயன்படுத்தி வருகிறது.

**இந்த நிலைமையில் உலக மக்களுக்குத் தேவையானது:**

உக்ரைனில் நேட்டோவைத் தோற்கடிக்க வேண்டும். ரஸ்யா மீதான மேற்குலகின் வெற்றி என்பது மனித குலத்துக்கு ஒரு புதிய பேரழிவாக முடியும். இதன் காரணமாக, பால்கன் பகுதிகள், மத்திய கிழக்கு, தென்சீனக் கடல் பகுதிகளில் புதிய போர்கள் ஆரம்பமாகி, அது மூன்றாம் உலக யுத்தத்திற்கு இட்டுச் செல்லும்.

பால்கன் நாடுகளையும், கிழக்கு ஐரோப்பாவையும் அமெரிக்க – ஐரோப்பிய யூனியன் பிடியிலிருந்து விடுவிப்பதன் மூலம், மேற்குலகம் தொடங்கியுள்ள புதிய பனிப்போரின் அழிவுகரமான விளைவுகளிலிருந்து விடுவித்து, சமத்துவத்தின் அடிப்படையில் இந்த நாடுகளுக்கிடையில் புதிய கூட்டுறவுக் கட்டமைப்பை உருவாக்க முடியும்.

**எமது கடமைகளானவை:**

நேட்டோ மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகளிலும், அமெரிக்க ஆதிக்கத்தில் உள்ள நாடுகளிலும், முற்றுமுழுதான ஊடகத் தணிக்கை உள்ளது. இந்த நாடுகளில் உள்ள மக்களுக்கு மேற்குலகம் உக்ரைனில் நடத்தி வரும் யுத்தம் ஒரு அநீதியான யுத்தம் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

யுத்தகளத்துக்கு ஆயுதங்கள், வெடி மருந்துகள், ஆயுத தளபாடங்கள் மற்றும் ஆட்களை அனுப்புவதை நாம் கட்டாயமாகத் தடுத்து நிறுத்த வேண்டும். ஆனால், எமது பிரதான பணி, எமது நாடுகளை நேட்டோ உறுப்புரிமை, அமெரிக்கக் கட்டுப்பாடு மற்றும் அமெரிக்க இராணுவத் தளங்கள் என்பனவற்றிலிருந்து விடுவிக்க வேண்டும்.

**எமது தீர்மானம்:**

1. “மூன்றாவது உலக யுத்தத்தை நிறுத்தும் சமாதானத்துக்கான சர்வதேச முயற்சி” என்ற பதாகையின் கீழ் எமது நோக்கங்களை முன்னெடுத்து இணைப்பதற்கான நிரந்தர சர்வதேச வலையமைப்பொன்றை உருவாக்குவது.
2. சர்வதேச நடவடிக்கைகள் மற்றும் ஒருமைப்பாட்டு தூதுக்குழுக்களை அமைத்து ரஸ்யா, டொன்பாஸ் (Donbass) மற்றும் பலஸ்தீனப் பகுதிகளுக்கு அனுப்புவது.
3. இரண்டாவது சர்வதேச சமாதான மாநாட்டை 2024 கடைசியில் நடத்துவது.

இந்த அறிக்கை ரோமில் நடந்த முதலாவது சர்வதேச சமாதான மாநாட்டில் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

**தமிழ் மொழிபெயர்ப்பு: தூயவன்**

## கியூபா மீதான பொருளாதாரத் தடையை நீக்க 187 நாடுகள் ஆதரவு அமெரிக்கா, இஸ்ரேல் எதிர்ப்பு

**கி**யூபா மீதான அமெரிக்காவின் சட்டவிரோத பொருளாதார தடைகளை நீக்க ஐக்கிய நாடு பொதுச்சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்கு 187 நாடுகள் ஆதரவு தெரிவித்த நிலையில் அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகள் மட்டும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. உக்ரைன் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

*1959* ஆம் ஆண்டு கியூபா புரட்சியைத் தொடர்ந்து, *1962* ஆம் ஆண்டு முதல் கியூபா மீது பல்வேறு தடைகளைக் கொண்டுவந்தது அமெரிக்கா. கியூபா மீது அமெரிக்கா விதித்துள்ள சட்டவிரோத பொருளாதாரத் தடைகளை நீக்குவதற்கு ஐ.நா பொதுச்சபையில் தீர்மானம் கொண்டு வரும் போதெல்லாம் அதற்கு பெரும்பான்மை ஆதரவு கிடைத்தாலும் அமெரிக்கா அதை நிராகரித்து விட்டு தமது சட்ட விரோத பொருளாதாரத் தடைகளை தொடர்வார்கள்.

தற்போது *31* ஆவது ஆண்டாக ஐ.நா பொதுச்சபையில் கியூபா மீதான *61* ஆண்டுகால கொடூரமான மற்றும் சட்டவிரோத தடைகளை முடிவுக்கு கொண்டு வர, கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை 187 நாடுகள் ஆதரவாக வாக்களித்த நிலையில் அமெரிக்காவும் இஸ்ரேலும் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தன. உக்ரைன் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

பொருளாதாரத் தடை மூலம் உணவு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக் குறையை உருவாக்கி கியூப மக்களுக்கு பெரும் நெருக்கடியை அமெரிக்கா ஏற்படுத்தி வருவதை சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் கண்டித்தனர்.

இத்தகைய “பொருளாதாரத் தாக்கம் கியூபா மக்களுக்கு மேலும் அதிக தீங்கு விளைவிக்கும்” என்று ஐ.நாவிற்கான காபோனின் பிரதிநிதி ஆரேலி ஃப்ளோர் கௌம்பா பாம்போ (Aurélie Flore Koumba Pambo) கூறினார். மேலும் இந்த முற்றுகை “தெளிவாக பிராந்தியத்திற்கும் கண்டங்களின் ஒற்றுமைக்கும் விரோதமான செயல்” என்றும் அவர் தெரிவித்தார்.

தீர்மானத்தின் வெற்றியை அறிவித்த கியூபா வெளியுறவுத்துறை அமைச்சர் புருனோ ரோட்ரிக்ஸ் (Bruno Rodriguez), “சட்ட விரோத, தவறான மற்றும் தார்மீக ரீதியாக நீடிக்க முடியாத கொள்கையின் காரணமாக அமெரிக்கா முழுவதுமாக தனிமைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துகிறது” என்றும் தெரிவித்தார்.

# சீனாவுக்கு எதிரான பிரச்சாரத்தை முறியடிக்க வேண்டும்!

**-பேராசிரியர் திஸ்ஸ விதாரண**

இலங்கையிலுள்ள முற்போக்கு சக்திகள் சீனாவுக்கு எதிராக ஏகாதிபத்திய சக்திகள் மேற்கொண்டு வரும் பிரச்சாரத்தை முறியடிக்கும் வகையில் இயக்கமொன்றை ஆரம்பிக்க வேண்டும் என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார். அண்மையில் கொழும்பில் நடைபெற்ற சீனா முன்னெடுத்து வரும் 'தடம் மற்றும் பாதை' (Belt and Road) பற்றிய கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பேராசிரியர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினால் வழிநடத்தப்படும் Asia Progress Forum என்ற சிந்தனைக் குழாம் (Think Tank) ஒழுங்கு செய்த கருத்தரங்கொன்றில் பங்குபற்றி பேராசிரியர் திஸ்ஸ விதாரண உரையாற்றினார். அங்கு அவர் மேலும் பேசுகையில்,

"சீனா ஏகாதிபத்தியத்தின் எவ்விதமான உதவியுமின்றியே இன்று ஒரு சக்திமிக்க நாடாக வளர்ந்துள்ளது. இருந்தபோதும், சீனாவுக்கு எதிராகப் பலவிதமான பிரச்சாரங்கள் நடத்தப்படுகின்றன. 'சீன கடன்பொறி' என்று ஒன்று இல்லையென பல உள்ளூர் மற்றும் சர்வதேச புத்திஜீவி அறிஞர்கள் (Scholers) எடுத்துரைத்த போதும், மேற்குலகிற்கு விசுவாசமான சிலர் இந்தப் பொய்யை இலங்கையில்



ஊக்குவித்து வருகின்றனர். எமது நாட்டில் உள்ள முற்போக்கு சக்திகள் ஐக்கியப்பட்டு இதை எதிர்க்க வேண்டும். இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு அரசாங்கமும் கட்டாயமாக எதிர்வினையாற்ற வேண்டும்". எனக் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய பேராசிரியர் சமிதா ஹெட்டிகே (Samitha Hettige) கூறுகையில், அரசாங்கம் தனிப்பட்ட நிறுவனங்கள் உட்பட எல்லாத் தரப்பினரிடமிருந்தும் பொறுப்பற்ற முறையில் கடன்களைப் பெற்றுள்ளது. எனவே இந்த நிதி கட்டாயமாக அபிவிருத்தி நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். சீன முயற்சியான தடம் மற்றும் பாதை திட்டம் ஏராளமான முதலீடுகளுக்குக் கதவுகளைத் திறந்து விட்டுள்ளது. நாம் இதை வெளிப்படைத் தன்மையுடன் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய இலங்கை – ஜெர்மனி தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் முன்னாள் தலைவரும், பொறியியலாளருமான விநோத் முனசிங்க (Vinod Moonesingha), சீனா மற்றும் இந்தியாவுடன் இலங்கை செய்து கொண்டுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் காரணமாக இரண்டு நாடுகளினதும் முதலீட்டாளர்கள் கவரப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார். அத்துடன், ஹம்பாந்தோட்டை இந்த இரண்டு பிரதான பொருளாதார சக்திகளுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் மூலம் கைத்தொழில் கேந்திரமாக உருவாகி வருகிறது எனக் குறிப்பிட்ட அவர், சீனர்கள் இலங்கைக்கு வந்து முதலீடு செய்து இந்தியச் சந்தைக்கான பொருட்களை உருவாக்கி வருகின்றனர் எனவும் தெரிவித்தார்.

# பலஸ்தீன ஆதரவு பேரணியில் திரண்ட 3 இலட்சம் பேர், குலுங்கியது வாஷிங்டன்

அமெரிக்க வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் 3 இலட்சத்திற்கும் அதிகமான அமெரிக்கர்கள், பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாகவும், இஸ்ரேலின் இனப்படுகொலையை கண்டித்தும், மாபெரும் பேரணி நடத்தி, அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டனையே திணறடித்துள்ளனர். பலஸ்தீன மக்களின் மீது நான்கு வாரத்திற்கு மேலாக இஸ்ரேல் நடத்தி வரும் இனப்படுகொலைகளுக்கு முழு ஆதரவு வழங்கி வரும் அமெரிக்காவைக் கண்டித்து, இங்கிலாந்து, ஜெர்மனி, ஆர்ஜென்ரினா, கிரீஸ், ஜோர்டான், துருக்கி, ஈராக், ஈரான், பாகிஸ்தான், இந்தோனேசியா என உலக நாடுகள் முழுவதும் மக்களின் தன்னெழுச்சிப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

அமெரிக்காவிலும் கடந்த சில நாட்களுக்கு முன்பு யூதர்கள் திரண்டு பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக போராட்டங்களை நடத்தினர். மேலும் பல அமைப்புகள் அமெரிக்க நாடாளுமன்றக் குழு அலுவலகத்தை முற்றுகையிட்டனர். இஸ்ரேலுக்கு ஆயுதங்களை வழங்க ஒப்புதல் அளிக்கக் கூடாது என போராட்டம் நடத்தினர். எனினும், இவை அடையாளப் போராட்டங்கள் என்ற அளவிலேயே இருந்தன.

இந்தச் சூழலில்தான், இஸ்ரேல் நடத்தி வரும் இனப்படுகொலைக்கு முழு அளவில் ஆதரவையும், ஆயுதங்களையும் வழங்கி வரும் அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்டனில் 3 இலட்சம் அமெரிக்கர்கள் பங்கேற்ற பிரம்மாண்ட பேரணியால் நகரமே குலுங்கியுள்ளது. பலஸ்தீனிய இளைஞர் இயக்கம், மக்கள் மன்றம், அல்–அத்வா, ஏகாதிபத்திய எதிர்ப்புக் குழுக்கள், பலஸ்தீனம் திரும்புவதற்கான பலஸ்தீன உரிமை மற்றும் பலஸ்தீனத்தில் நீதிக்கான தேசிய மாணவர்கள் அமைப்பு உள்ளிட்ட அமைப்புகளால் இந்தப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், இந்தப் பேரணியில் 3 இலட்சம் பேர் திரண்டது, அமெரிக்க ஏகாதிபத்திய ஆட்சியாளர்களை அதிர்ச்சி அடையச் செய்துள்ளது. ''இஸ்ரேலுக்கு அமெரிக்கா செய்து வரும் நிதி யுதவி நிறுத்தப்பட வேண்டும் காஸாவில் உட னடியாக போர் நிறுத்தம் செய்ய வேண்டும் நதி முதல் கடல் வரை பாலஸ்தீனம் விடுதலை பெறும்! (From the river to sea)" என்று முழக்கங்களை எழுப்பிய வண்ணம் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து வெள்ளை மாளிகை

**தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க...**

# ஒரு யூதர் குறிப்பிட்டுள்ள முக்கிய குறிப்புக்கள்




**N**orman Gary Finkelstein *1953* இல் அமெரிக்காவில் பிறந்த யூத இனத்தவர். அவரது பெற்றோர் இருவரும் நாசிகளின் இருவேறு கொன்சன்றேசன் (Concenration) முகாம்கள் (Auschwitz, Majdanek) இலிருந்து தப்பிப் பிழைத்தவர்கள். இவர்கள் *1995* இல் காலமாகினர். பின்கல்ஸ்ரைன் அவர்கள் அறியப்பட்ட அரசியல் விஞ்ஞானியும், பேராசிரியரும், எழுத்தாளரும் ஆவார். அவர் சியோனிசம், (Zionism) கொலோகாஸ்ற் (Holocaust) என்பன குறித்து நூல்கள் எழுதியவர். அவர் The Jimmy Dore Show இற்கு *12.10.2023* இல் வழங்கிய நேர்காணலில் அவர் முன்வைத்த கருத்துகளை கீழே தமிழில் தருகின்றோம்.

யார் காஸா மக்கள்?. 70 வீதமான காஸா மக்கள் *1948* யுத்தத்தின் போதான அகதிகள் அல்லது அந்த அகதிகளின் வாரிசுகள். இஸ்ரேலிய அரசால் துரத்தப்பட்ட *750,000* பலஸ்தீனர்களில் *290,000* பேர் காஸாவில் தங்கினர். இப்போது காஸாவில் *2.3* மில்லியன் மக்கள் இருக்கிறார்கள். அவர்களில் 50 வீதம் குழந்தைகள் மற்றும் சிறுவர்கள். இந்தப் பூமியின் மிக சனத்தொகை நெரிசலைக் கொண்ட இடம் காஸா. 5 மைல் அகலமும் 25 மைல் நீளமும் கொண்ட சிறிய நிலப் பரப்பு.

*2006* இல் காஸாவிலும் மேற்குக் கரையிலும் நடந்த பாராளுமன்றத் தேர்தலினை கண்காணிக்கும் குழுவில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டரும் இருந்தார். மிக நேர்மையாகவும் ஒழுங்காகவும் நடந்த தேர்தல் இது என அவர் கூறியுமிருந்தார். இதில் கமாஸ் அமைப்பினர் பெரும்பான்மை வெற்றியை ஈட்டி அதிகாரத்துக்கு வந்தனர். இவ்வாறு ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட கமாஸ் இனை நிராகரித்து இஸ்ரேல் முற்றுகையை (blocade) செயற்படுத்தியது. அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் பொருளாதாரத் தடைகளை விதித்தன. காஸாவில் 50 வீத மக்கள் வேலைவாய்ப்பு அற்றவர்களாக இருந்தனர். அதில் 60 வீதமானோர் இளையோர்கள்.

காஸாவுக்குள் எவருமே உள்நுழைய முடியாது. அதேபோல் காஸாவிலிருந்து எவருமே வெளியே செல்ல முடியாது. இந்த 17 வருடத்திலும் இளையோர்கள் இந்த 525 சதுர மைல் பரப்பளவுக்கு வெளியே தம் வாழ்வில் எதையும் கண்டதில்லை. கொன்சர்வேற்றிவ் கட்சியைச் சேர்ந்த முன்னாள் பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் அவர்கள் காஸாவை ஒரு “திறந்தவெளிச் சிறைச்சாலை” என வர்ணித்தார். இஸ்ரேலின் முன்னணி சமூகவியலாளர் Baruch Kimmerling ஹிப்ரூ மொழியில் (2003) எழுதிய “ஆரியல் ஷரோனின் பலஸ்தீனத்துக்கு எதிரான போர்” என்ற தனது நூலில் காஸாவை இதுவரை தோன்றியிராத மிகப் பெரும் “கொன்சன்றேசன் முகாம்” (கொ.மு) என வர்ணித்தார். அரைவாசிப் பேர் இந்த கொ.மு இற்குள் பிறந்து குழந்தைகளாகி சிறுவர்களாகி இளையோர்களாகி வளர்ந்தவர்களாகினர். அவர்களது அனுபவங்கள் இந்த கொ.மு எல்லைக்குள்தான் இருந்தது. இவ்வாறான நிலையில் இந்த காஸா மக்கள் எதைச் செய்ய முடியும்?.

முன்னர் எனது தாய் தந்தையர் நாசிகளின் கொ.மு இல் அடைத்து வைக்கப்பட்டவர்கள். அதனால் இந்த மக்களும் எனது பெற்றோர் அனுபவித்ததைப் போன்ற அதே நிலைமைக்குள் விடப்பட்டதற்காகவும் அந்த நிலைமையை முகங்கொடுக்க வைத்ததற்காகவும் இஸ்ரேலியன் என்ற முறையில் நான் என்னை ஒரு குற்றவாளியாக உணர்கிறேன். எனது 40 வருட உழைப்பு இந்த இஸ்ரேல் பலஸ்தீன முரண்பாட்டில் எதையுமே செய்யமுடியாமல் போனதை உணர்கிறேன்.

இந்த கொ.மு இல் பிறந்த அதே மனிதன் சில நாட்களுக்கு முன் (ஒக்ரோபர் 7) அந்த முகாமிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முயன்றதை, அதற்காக அவர்கள் என்னவிதமான தந்திரோபாயத்தை உபயோகித்தார்கள் என்பதை யார்தான் விமர்சிக்க முடியும்? நான் இதை அங்கீகரிக்கவும் இல்லை. நிராகரிக்கவும் இல்லை. ஏனெனில் அப்படியொரு கொ.மு இனுள் நானும் பிறந்து 20 வருட வாழ்வை அங்கு வாழ்ந்திருந்தால் என்ன செய்திருப்பேன் என எனக்குத் தெரியாது.

2008கள் 2012 களில் அமெரிக்காவின் ஜனாதிபதி போட்டிக்கு குடியரசுக் கட்சியினால் தெரிவுசெய்யப்பட்டவரான றொன் பவுல் அவர்கள் 2009 இல் ஒரு உரையின்போது இஸ்ரேலானது பி.எல்.ஓ (பலஸ்தீன விடுதலை இயக்கம்) க்கு எதிராக கமாஸின் உருவாக்கத்தை உற்சாகப்படுத்தியது என தெரிவித்திருந்தார். ஆம். அவர் சொல்வது வரலாற்று ரீதியில் சரிதான். இஸ்ரேல் கமாஸை பல வழிகளில் உற்சாகப்படுத்தியது என்பது உண்மை. ஆனால் பி.எல்.ஓ க்கு ஒரு எதிர் அணியாக கமாஸை உருவாக்குவதற்கு இஸ்ரேல் கமாஸின் மீது நெருக்கடிகளை உருவாக்கியது என்பதும் உண்மை.

நான் கமாஸை நியாயப்படுத்தவில்லை. பலஸ்தீன மக்கள் தமது தலைமையை தாமே தீர்மானிக்க கடமைப்பட்டவர்கள். 2006 தேர்தலில் அவர்கள் கமாஸை

தெரிவுசெய்தார்கள். பொருளாதாரத் தடை நடைமுறைப்படுத்தப்பட்ட பின் அதன் தாக்கங்களால் கமாஸ் தமது தலைமை ஆற்றவேண்டிய கடமையிலிருந்து தோல்வி அடைந்திருக்கக் கூடும். அதனால் கமாஸ் அடுத்த தேர்தலில் தோல்வியைச் சந்தித்திருக்கக் கூடும். இந்த ஜனநாயக முறைமைக்கான சந்தர்ப்பம் ஒருபோதுமே பலஸ்தீன மக்களுக்கு அனுமதிக்கப்படவில்லை. அத்தோடு 2006 வரை கமாஸ் இஸ்ரேலை ஒரு அரசாக அங்கீகரிக்கவில்லை என்றபோதும், அதிகாரத்துக்கு வந்த பின்னான ஒரு பரிணாம வளர்ச்சிக் கட்டத்தில் தலைமை இஸ்ரேலுடன் பேச்சுவார்த்தை மேசைக்கு வந்திருக்கவும் கூடும். நிச்சயமாக என நான் சொல்லவில்லை. சாத்தியம் என்ற அர்த்தத்தில் சொல்கிறேன். ஒருபோதுமே இந்த சந்தர்ப்பம் அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

கமாஸ் உம் காஸா மக்களும் இரண்டுமே ஒன்றுதான் என நான் சொல்ல வரவில்லை. எவ்வாறாயினும் கமாஸை வளப்படுத்தியவர்களும், ஆதரித்தவர்களுமான இளையோர்கள் அந்த அமைப்பில் இணைந்தார்கள். அவர்களது இயல்பு வாழ்வுக்கான ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருந்தால், அவர்கள் மூச்சுவிட முடிந்திருந்தால், அவர்கள் கமாஸில் இணைந்திருப்பர்களா எனத் தெரியாது. இந்த இளசுகள் தமது வாழ்வை தியாகம் செய்ய முன்வருவது ஏனெனில், நிலைமை வாழ்தலுக்கான எந்தச் சந்தர்ப்பத்தையும் அவர்களுக்குக் கொடுக்கவில்லை, நம்பிக்கையீனத்தைக் கொடுத்தது என்பதால்தான். எனவே சரியாகச் சொல்வதானால் நான் கமாஸை காஸா மக்களிலிருந்து பிரித்துப் பார்க்கவில்லை. காஸா மக்கள் மீது செலுத்தப்பட்ட தடைகளானது கமாஸ் மீது ஒரு அனுதாபத்தையும் தூண்டலையும் அந்த மக்களிடையில் ஏற்படுத்தியிருந்தது. அவர்களுக்கு வேறு தேர்வுகள் இருக்கவில்லை. வேறு வழிவகைகள் இருக்கவில்லை. இந்த இடத்தில் ஒரு முக்கியமான கேள்வியை முன்வைக்க முடியும். "எங்கே, எது, என்ன… அவர்களது தேர்வாக இருக்க முடியும்?" என்பதே அந்தக் கேள்வி.

காலங்காலமாக இஸ்ரேல் மோசமான கிரிமினல் நடவடிக்கையை காஸா மீது ஏவி வருகிறது. பல இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டது. உதாரணமாக 2007 மார்கழியிலிருந்து 2008 தை மாதம் வரை Hot Winter என்ற பெயரில் ஓர் இராணுவ நடவடிக்கையைச் செய்தது. 2009 இல் சர்வதேச மனித உரிமைகள் சபை ஒரு நீண்ட அறிக்கையை வெளியிட்டது. அதன்படி 1400 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். அதில் 350 பேர் குழந்தைகள். 6000 வீடுகள் அழிக்கப்பட்டன. 2014 இல் Protective Edge என்ற இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது. இதில் 550 குழந்தைகள் கொல்லப்பட்டனர். 18,000 வீடுகள் தரைமட்டமாகின. இந் நடவடிக்கை முடிந்த 51 நாட்களுக்குப் பின் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் அந்த இடத்தைப் பார்வையிடச் சென்றிருந்தார். "எனது வாழ்க்கையில் இவ்வாறான ஒரு பேரழிவை இதற்குமுன் கண்டதில்லை" என அவர் கூறியிருந்தார்.


நீங்கள் கேட்கலாம், "ஏன் பலஸ்தீனர்கள் வன்முறையற்ற வழியில் பிரச்சினையைத் தீர்க்க முயலக்கூடாது?" என! அவர்கள் அவ்வாறான வழியில் முயற்சி செய்து பார்த்தவர்கள். அத்தோடு 2018 இல் அவர்கள் ஒரு மிகப் பெரும் ஊர்வலமொன்றைச் செய்திருந்தார்கள். அது அமைதியான வழியில் தொடங்கியது. ஆனால் அது அவ்வாறு முடியவில்லை. இதன்போது இஸ்ரேல் என்ன செய்தது என்பதை ஐ.நா மனித உரிமைகள் சபையினர் தமது அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இஸ்ரேல் உளவுப்படை மறைந்திருந்து (ஸ்னிப்பர் தாக்குதல் மூலம்) வைத்தியத்துறையைச் சார்ந்தவர்களையும் ஊடகவியலாளர்களையும் மாற்றுத் திறனாளர்களையும் குறிவைத்துச் சுட்டுக் கொன்றது. இதைத் தொடர்ந்து காஸா மீது மேலும் மிகக் கொடுமையான மனிதத்தன்மையற்ற தடைகளை நடைமுறைப்படுத்தியது. இப்போது அந்தக் கேள்விக்கு மீண்டும் வருவோம். அதற்கான பதில் அந்த மக்கள் என்ன செய்ய முடியும் என்ற கேள்விதான்.

இஸ்ரேலிய பிரதமர் நெத்தன்யாகு பலஸ்தீன பிரச்சினையை ஒடுக்குவதற்கான ஒரு உத்தியை கையாண்டார். அண்டை அரபு நாடுகளுடன் எல்லா ஒப்பந்தங்கள் குறித்தும் பேச்சு நடத்தினர். அதன்மூலம் பலஸ்தீனப் பிரச்சினையை காணாமல் செய்யலாம் என நினைத்தார். இந்த காணாமல் செய்தல் என்பது ஒரு சூழ்ச்சிகரமான வழிமுறை. காஸா கொ.முகாம் வாழ்வை ஒரு நீண்ட காலத்துக்கு தொடரச் செய்து அவர்களை பசியில் மரணிக்க விடுவதை (starvation) நோக்கமாகக் கொண்டது. ஆனால் அந்த மக்கள் மரணிக்க மறுத்தார்கள். அதாவது தமது இருத்தலுக்காக கிளர்ந்தெழுந்தார்கள்.

"நாம் மிருகங்களுடன் போரிடுகிறோம்" என இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் கூறினார். "காஸாவுக்குள் உணவு, தண்ணீர், மின்சாரம், எரிபொருள் எல்லாவற்றையும் நிறுத்துகிறோம்" என அறிவித்தார். இந்த 'மிருகங்களில்' அரைவாசிப் பேர் குழந்தைகள். ஒரு மில்லியன் குழந்தைகள். அவர்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கின்றனர். எனவே அவர்களை பட்டினிச் சாவு பிரளயத்தை நோக்கித் தள்ள இஸ்ரேல் முயற்சிக்கிறது. காலமாகிய எனது அம்மா சொல்வார், "பலஸ்தீனத்தில் பிறந்ததைத் தவிர என்ன குற்றத்தை அவர்கள் செய்தார்கள்?" என! கமாஸ்க்கு எதிராக வாதிடுபவர்களைப் பார்த்து நான் கேட்கிறேன், பலஸ்தீனத்தில் பிறந்ததைத் தவிர அந்த ஒரு மில்லியன் குழந்தைகளும் என்ன குற்றம் செய்தனர்? என!

இப்போது சமூகவலைத்தள காவலர்கள் கிளர்ந்தெழுகிறார்கள். இஸ்ரேலின் நடவடிக்கைகளையும் நாசிகளின் நடவடிக்கைகளையும் ஒப்பீடு செய்வதற்கு எதிராக கிளம்புகிறார்கள். இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் உணவு, தண்ணீர், மின்சாரம், எரிபொருள் என்பவற்றை காஸாவுக்குள் செல்ல அனுமதிக்க மாட்டோம் என்றார். நெத்தன்யாகு தாம் ஒரு நீண்ட யுத்தத்துக்கு தயாராகிறோம் என்றார். இந்த இரண்டு அறிவிப்புகளையும் அருகருகாக வைத்து இணைத்துப் பார்க்கிறபோது, இந்த சமூகவலைத்தள காவலர்களுக்கு என்ன புரிகிறது என்பதை கேட்க விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரை இஸ்ரேல் அரசானது காஸா பிரச்சினை மீதான தனது இறுதித் தீர்வை இவ்வழியில் வரைந்திருக்கிறது என்கிறேன்.

கமாஸை இல்லாமலாக்க தாம் இஸ்ரேலுக்கு ஆதரவளிப்போம் என முன்னாள் ஜனாதிபதி ஒபாமா சொல்லியிருக்கிறார். அமைதிக்கான நோபல் பரிசை வென்ற ஒபாமா உங்களிடம் நான் கேட்கிறேன், கமாஸை இல்லாமலாக்குவதற்கு இஸ்ரேல் தாம் எவ்வாறு எந்த வழியில் போவோம் என்பதை தெளிவுபடுத்தியிருக்கிறது. காஸா



**Norman Gary Finkelstein**

மக்களுக்கான உணவு தண்ணீர் மின்சாரம் எரிபொருள் என்பவற்றை மறுப்பதன் மூலம் அதை இஸ்ரேல் செய்யப் போவதாக அறிவித்திருக்கிறது. அப்படியாயின் நீங்கள் காஸா மக்களின் மீதான கூட்டுப்படுகொலையை ஆதரிக்கிறீர்களா? அதாவது நீங்கள் இஸ்ரேலுக்கு செங்கம்பள வரவேற்பை அளிப்பது என்பது பலஸ்தீன மக்களின் மீதான கூட்டுப் படுகொலைக்கு செங்கம்பளம் விரிப்பதாகும். நீங்கள் உங்கள் வேலைகளுக்கு பொறுப்புள்ளவர்களாக இருங்கள்.

சர்வதேசச் சட்டத்தின்படி வாழ்வியல் தேவைகளின் மீதான தடை என்பது கூட்டுத் தண்டனை (collective punishment) ஆகும். அதன்படி அது சர்வதேசச் சட்ட விதிமுறைகளுக்கு விரோதமானது. தொடர்ச்சியாக சுமத்தப்பட்டுக் கொண்டிருக்கும் இந்தத் தடைகள் அகற்றப்பட்டால், மற்றைய மக்களைப் போலவே காஸா மக்களும் தமது வாழ்வாதாரத்தை தேடவும் அதை மேம்படுத்தவுமான சந்தர்ப்பங்களை தேடிக்கொள்வர். அதன்பிறகு மக்கள் 2006 இல் நடந்தது போன்றற நிலைக்கு வராமலிருக்க சாத்தியம் உண்டு. 2006 தேர்தலில் அவர்கள் பலஸ்தீன ஆட்சியாளர்களை நிராகரித்து கமாஸ்க்கு வாக்களித்திருந்தனர். சட்டவிரோதமானதும், குற்றத்தன்மை வாய்ந்ததும், தார்மீகநெறி அற்றதுமான தடைகளையும் முடிவுக்குக் கொண்டு வந்து அந்த மக்களை வாழ விடுங்கள். அவர்கள் மூச்சுவிடட்டும்.

இஸ்ரேல் ஒக்ரோபர் 7 இல் எதிர்கொண்டதை பலஸ்தீனர்கள் பலமுறை எதிர்கொண்டிருக்கின்றனர். அவை குறித்த எண்ணிலடங்கா மனித உரிமை அறிக்கைகள் இருக்கின்றன. இஸ்ரேல் காஸாவுக்குள் நுழைந்த ஒவ்வொரு முறையும் விசேட இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்ட ஒவ்வொரு முறையும் வீடுகள், மசூதிகள், வைத்தியசாலைகள் குழந்தைகள் என எல்லோரையும் இலக்காக்கியது. எல்லாம் ஆயிரக்கணக்கில் ஆவணப்படுத்தப்பட்டிருக்கின்றன.

நுட்பமான சொற்பிரயோகங்களில் நான் பேச விரும்பவில்லை. “கமாஸ் இஸ்ரேலைத் தாக்கியது” என்பது அவ்வகைப்பட்ட சொல்லாடல் ஆகும். அது தவறானது. காஸா இஸ்ரேலின் ஒரு பகுதியாக உள்ளது. இஸ்ரேலானது காஸா உடனும் மேற்குக் கரையுடனும் (வலிந்த) ஒரு நிழல் அரசு இணைப்பைக் கொண்டுள்ளது. சர்வதேச சட்டம் ஆக்கிரமிப்பு என்பதையும் நில இணைப்பையும் தெளிவாக வரையறுத்திருக்கிறது. அதன்படி ஆக்கிரமிப்பு என்பது தற்காலிகமானது. இணைப்பு என்பது நிரந்தரமானது. காஸாவும் மேற்குக் கரையும் அரை நூற்றாண்டுக்கு முன் ஆக்கிரமிக்கப்பட்டு பின் இஸ்ரேலுடன் இணைக்கப்பட்டுவிட்டது. அது நிரந்தரமானது. எனவே காஸா இஸ்ரேலை தாக்கியது என சொல்லாடுவது அர்த்தமற்றது. காஸா இஸ்ரேலின் ஒரு பகுதி. சில நாட்களுக்கு முன் (ஒக்ரோபர் 7) நடந்ததை பொருத்தமான வார்த்தையில் சொன்னால் தமது எசமானுக்கெதிரான அடிமைகளின் கலகம் அது. அதுதான் யதார்த்தம். “எங்களது அரசு தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறது” என நுட்பமாக சொல்லாடாதீர்கள். அது தவறு. மாறாக “அந்த அடிமைகள் தமது விடுதலைக்காகவும் சுதந்திரத்திற்காகவும் கிளர்ந்தெழுந்தனர்” என்பதே சரி.

வியட்நாம் போரின்போது ஐ.நா செயலராக இருந்தவர் பர்மாவைச் (மியன்மார்) சேர்ந்த U Thant அவர்கள். “யுத்தத்தில் முதல் பலியாவது உண்மை தான்” என அவர் சொன்னார். “அமெரிக்க மக்களுக்கு வியட்நாம் போரின் உண்மைத்தன்மை தெரிந்தால் அவர்கள் போரை ஆதரிப்பார்கள் என நான் நம்பவில்லை” என அவர் 1965 இல் சொல்லியிருந்தார். அதையே இப்போது நானும் சொல்கிறேன். அமெரிக்க மக்களுக்கு இந்தப் போரின் உண்மைத்தன்மை தெரிந்தால் அவர்கள் இதை ஆதரிக்க மாட்டார்கள். மேற்குலகில் இஸ்ரேல் – பலஸ்தீன பிரச்சினை பற்றி அதிலும் குறிப்பாக காஸா பற்றி போதியளவு அறிவை கொண்டவர்கள் அரிதானவர்கள். 1948 இலிருந்து அவர்களுக்கு வரலாறு தெரிய வேண்டும் என்பதுகூட இல்லை. 2006 இலிருந்து, அதாவது 18 வருடங்களுக்கு உட்பட்ட வரலாறு தெரிந்தாலே போதுமானது. ஊடகங்கள் மற்றும் லொபிகளைத் தாண்டி பலஸ்தீன மக்களின் சீற்றத்தை உணர்ந்து கொள்ளும் திறன் கொண்டவர்களாக அவர்கள் இருக்க முடியும்.

இந்த மக்கள் எங்காவது போய்க் கொள்ள முடியும் என நெத்தன்யாகு நம்புகிறார். இஸ்ரேலிய அதிகாரிகளோ காஸாவுக்கள் வாழும் மக்களின் பட்டினிச்சாவுக் கோட்டுக்கு சற்று மேலாக எவ்வளவு கலோரிகள் தேவைப்படும், அதற்கு கணக்காக அனுமதிக்கப்படக் கூடிய உணவுப் பொருட்களின் அளவு எவ்வளவு என்பவற்றைக் கணிப்பதில் ஈடுபடுகின்றனர். அந்த அளவையே உள்ளே அனுமதிக்கின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் சர்வதேச குற்றவியல்

நீதிமன்றத்தில் தண்டிக்கப்படக் கூடியவர்கள். இவர்களை தடுத்து நிறுத்த (நீதிமன்றம் போன்ற) நிறுவனம் இருக்கின்றது. நெத்தன்யாகு, பாதுகாப்பு அமைச்சர் போன்றோரை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்த போதிய ஆதாரங்கள் உள்ளன. பலஸ்தீன அரசு இவர்களை அங்கு கொண்டுவர முடியும். (பலஸ்தீன அரசு 2015 இல் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் ஓர் அங்கத்தவராக சேர்ந்திருக்கிறது– மொழிபெயர்ப்பாளர்). நீதிமன்றத்தில் அவர்கள் விசாரிக்கப்படும் பட்சத்தில் அமெரிக்கா அவர்களை பாதுகாக்காது. எனவே இஸ்ரேல் ஒன்றுக்கு இரண்டு தடவை இதை யோசிக்க வேண்டும்.

ரஸ்யா 1967 எல்லையின் அடிப்படையில் "இரு அரசு" (two state) தீர்வை நடைமுறைப்படுத்த வேண்டும் என கோருவது மிகச் சரியானது. 2006 இல் கமாஸ் தேர்தலில் வென்றபின் அவர்களது அரசியல் நிலைப்பாட்டில் ஒரு பரிணாம வளர்ச்சி ஏற்பட்டிருந்தது. அதேகாலத்தில் ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் சொல்லும்போது நாங்கள் இதை (இரு அரசுத் தீர்வை) ஆதரிக்க மாட்டோம். ஆனால் பலஸ்தீன மக்கள் விரும்பினால் நாங்கள் இதற்குக் குறுக்கே நிற்க மாட்டோம் என கூறியிருந்தார். ஈரான் திரும்பத் திரும்ப சர்வதேச சட்டங்களின் நியமங்களுக்கு உட்பட்ட தீர்வுக்கு ஆதரவாக ஐ.நா வில் வாக்களித்திருந்தது. முக்கியமாக சட்ட மீறல் செய்தது அமெரிக்காவும் இஸ்ரேலும்தான். எல்லா தரப்பும் சமாதானமாக வாழ வழிவகுக்கும் இந்த விதிமுறைகளை அவர்கள் அரை நூற்றாண்டுகளாக மறுத்து வருகின்றனர். அதில் அவர்கள் வெற்றி அடைந்தனர். தோற்கவும் செய்தனர். அது துல்லியமாக இன்றைய நிலையினை வந்தடைய வைத்திருக்கிறது. இஸ்ரேல் பலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுப்பதன் மூலம் சர்வதேச சட்டங்களை கடைப்பிடிக்கவில்லை.

மக்கள் என்பதற்குப் பதிலாக 'மனித மிருகங்கள்' என பலஸ்தீனர்களை விளித்தார்கள். தாம் அதிமனிதர்கள் (Superman) எனவும் பலஸ்தீனர்களும் அரபுக்களும் சாதாரணமானவர்கள் எனவும் கருதினார்கள். வரைபடத்தில் காஸா ஒரு சிறு முத்திரை போன்ற இடம். ஆனால் காஸாவின் சுரங்கங்கள் இந்த உலகின் 'தப்பிப் பிழைக்கும்' இடமாக இருக்கிறது எனலாம். இஸ்ரேலின் நவீன தொழில்நுட்பம் காஸாவின் மூலை முடுக்குகளுக்குள் உருளுகிறது. ஒரு மிகக் கடினமான சூழ்நிலையில் சிக்கலான நடவடிக்கையில் அவர்கள் இறங்கியிருக்கிறார்கள்.

அந்த சுரங்கங்கள் இராணுவத்தின் கடைசிப் படுகுழி ஆகலாம். 24 மணி நேரம். கிழமையில் 7 நாட்கள். காஸாவின் சுரங்கப் பாதைகள் தப்பிப் பிழைத்தலுக்கான அதிநவீனமானதும் கண்காணிப்பானதுமானதுமாக இருக்கிறது. அதாவது மனிதகுல புத்திக் கூர்மையே அவர்களின் உயர்ந்த தொழில்நுட்பமாக இருக்கிறது. இது மதிப்பு வாய்ந்தது. அத்தோடு அடக்கமுடியாத சுதந்திர தாகத்தின் குறியீடாக அமைந்திருப்பது, இன்னொரு வகையில் மதிப்பு வாய்ந்தது. எல்லாப் பயங்கரங்களும் சூழ்ந்திருக்கிற போதும் தமது உடலுழைப்பின் மூலமும் புத்திக் கூர்மையின் மூலமும் சாதித்துள்ள காஸா மக்களின் இந்தச் சாதனையை மதிக்கிறேன். அளவற்ற இரத்தம் சிந்தப்படுகிற இந் நிலைமையில், தமது அடிமைத்தனத்துக்கு எதிராக போராடும் காஸா மக்களின் உரிமையை நான் மதிக்கிறேன், கௌரவப்படுத்துகிறேன். இந்த கொன்சன்றேசன் முகாமிலிருந்து அவர்கள் விடுதலையாவதோடு தமது விடுதலையைப் பெறும் சந்தர்ப்பத்தையும் அவர்கள் பெறுவார்கள் என்பது நிச்சயம்!

**–நன்றி: யாழ் முஸ்லீம் இணையம்**

# இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி பலஸ்தீனத்துக்கு தனது பூரண ஒருமைப்பாட்டைத் தெரிவித்துள்ளது

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி விடுத்துள்ள ஓர் அறிக்கையில், பலஸ்தீனப் பிரதேசத்தை சட்ட விரோதமாகவும், குற்றவியல் ரீதியிலும் இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ளமைக்கு எதிராக பலஸ்தீன மக்கள் நடத்தி வரும் போராட்டம் அதிகரித்துள்ள இந்த வேளையில் தனது தொடர்ச்சியான உறுதியான ஆதரவை மீண்டுமொருமுறை வெளிப்படுத்தியுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இஸ்ரேலின் பாசிச வலதுசாரி அரசாங்கத்தின் நடவடிக்கைகள் காரணமாகவே இன்றைய அபாயகரமான நிலைமைகள் ஏற்பட்டு ஏராளமான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்த நிலைமை உருவானதிற்கான முழுப் பொறுப்பும் இஸ்ரேல் அரசாங்கத்தையே சாரும்.

ஒக்ரோபர் மாதத் தொடக்கத்தில் இஸ்ரேலிய அரசாங்கத்தால் பலஸ்தீனப் பகுதிகளில் குடியேற்றப்பட்ட யூதர்கள் சிலர் செய்த நடவடிக்கைகளாலும், அல்–அக்ஸா மசூதி பகுதியில் ஏற்படுத்தப்பட்ட அசம்பாவிதங்களாலுமே மோசமான நிலைமைகள் உருவாகின.

இரண்டு தரப்பிலும் ஏற்பட்ட மரணங்களும், அவர்களுக்கு எதிரான வன்முறைகளும் கட்டாயமாகத் தவிர்த்திருக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன், அவை கண்டனத்துக்கு உரியவையுமாகும். இருந்த போதிலும், தெளிவான உண்மை என்னவென்றால், பலஸ்தீன மக்களுக்கு எதிராக நாளாந்த அடிப்படையில் கோரமான குற்றங்கள் இஸ்ரேலிய இராணுவத்தாலும், அரச ஆதரவுடன் குடியேற்றப்பட்ட யூதக் குடியேற்ற வாசிகளாலும் அரங்கேற்றப்பட்டு வந்துள்ளன.

காஸாவில் இஸ்ரேல் நடத்தி வரும் விமானக் குண்டு வீச்சால் குழந்தைகள் உட்பட பல்லாயிரக்கணக்கான பலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டுள்ளதையும் ஏராளமானோர் காயமடைந்துள்ளதையும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

காஸா மக்கள் கூட்டாகத் தண்டிக்கப்படுவது ஒரு போர்க்குற்றமாகும். அந்த நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இஸ்ரேல் ஏகாதிபத்திய சக்திகளின் உதவியுடன் பல தசாப்தங்களாக சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை மீறிச் செயல்பட்டு வருகிறது. இஸ்ரேல் – பலஸ்தீனப் பிரச்சினைக்கான அடிப்படைத் தீர்வைக் காண்பதற்கு எந்தவொரு முயற்சியும் இதுவரை எடுக்கப்படவில்லை. இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வை எட்டுவதற்கு ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என இலங்கை கம்யூனிஸ்ட்

**தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க...**

# இலங்கைக்கு முழு ஆதரவு வழங்கத் தயார்!

***-சீன நிதியமைச்சர்***



**இ**லங்கையின் கடன் மீட்சிக்காக இரு தரப்பினருக்கும் பொருத்தமான இடைக்கால மற்றும் நீண்ட கால வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சீனா முழுமையானஆதரவை வழங்க தயாராக இருப்பதாக முன்னாள் சீன நிதி அமைச்சர் லியு குன் (Liu Kun) தெரிவித்தார்.

சீனாவிற்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் சீன நிதி அமைச்சருக்கும் இடையிலான இருதரப்பு பேச்சுவார்த்தை ஒக்ரோபர் 19 காலை சீனத் தலைநகர் பீஜிங்கில் இடம்பெற்ற போதே சீன நிதி அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார சவாலை சீனா நன்கு புரிந்துகொண்டுள்ளதாக தெரிவித்த சீன நிதியமைச்சர், நெருக்கடியை சமாளிக்க இதுவரை இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகளின் முன்னேற்றத்தையும் வரவேற்றார்.

இலங்கையின் அபிவிருத்திக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு சீனா தொடர்ந்து பூரண ஆதரவை வழங்கும் எனவும் சீன நிதி அமைச்சர் உறுதியளித்தார்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான பணப் பரிமாற்றம் தொடர்பில் நீண்டகாலமாக கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றதாகவும், சீனாவுடன் நெருக்கமாகச் செயற்படும் ஏனைய சர்வதேச நிறுவனங்களும் இலங்கைக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுவதாகவும் சீன நிதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான சவாலான பணியில் இலங்கைக்கு சீனாவின் தொடர்ச்சியான ஆதரவை மிகவும் பாராட்டுவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார மீட்சியை ஏற்படுத்துவதற்கும் இலங்கையில் போட்டித்தன்மை வாய்ந்த டிஜிட்டல் மற்றும் பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்குமான வேலைத்திட்டம் தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டது.

இந்த சந்திப்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் சண்ட்ரா பெரேரா ஆகியோர் கலந்துகொண்டனர்.

---

**5ம் பக்கத்தொடர்ச்சி...**

நோக்கி அணிவகுத்துச் சென்றனர். இஸ்ரேல் இராணுவத்தால் காஸாவில் கொல்லப்பட்டவர்களின் பெயர்களின் நீண்ட பட்டியலை ஏந்திப் பிடித்தபடி, ‘பைடன் நீங்கள் மறைக்க முடியாது. உங்கள் மீது இனப்படுகொலை குற்றச் சாட்டை சுமத்துகிறோம்’ என்றும் போராட்டக்காரர்கள் முழக்கங்களை எழுப்பினர்.

**9ம் பக்கத்தொடர்ச்சி...**

கட்சி வலியுறுத்துகிறது.

அத்துடன், பலஸ்தீனப் பிரதேசங்களில் இஸ்ரேல் குற்றத்தனமாக மேற்கோண்டு வரும் இனவாத சட்ட விரோதக் குடியேற்றங்களை நிறுத்தி, இந்தப் பிரச்சினைக்கு “இரு நாடுகள்” என்ற தீர்வைக் காணும்படி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகின்றது.

1967 யூன் 4 ஆம் திகதி இருந்த எல்லைகளின் அடிப்படையில், கிழக்கு ஜெருசலத்தை தலைநகராகக் கொண்டு, சுதந்திர பாலஸ்தீன அரசு ஒன்றை உருவாக்குவதற்காக, பலஸ்தீன மக்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் போராட்டத்துக்கு, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தனது பூரணமான ஒருமைப்பாட்டைத் தெரிவித்துக் கொள்கிறது.

**13ம் பக்கத்தொடர்ச்சி...**

காலமானர். சீனாவில் உள்ள புரட்சித் தியாகிகளின் கல்லறையில் இவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.


மருத்துவத் துறையில் ஒரு தனிநபரின் சிறந்த பங்களிப்பு, வீர மனப்பான்மை மற்றும் சிறந்த மனிதாபிமானம் ஆகியவற்றை அங்கீகரிக்கும் வகையில், சீனாவில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை “நோர்மன் பெத்யூன் பதக்கம்” வழங்கப்படுகிறது.

சீனாவின் தேசிய வீரராக அறிவிக்கப்பட்ட இவரை போற்றும் வகையில், அந்நாட்டில் உள்ள பல்வேறு மருத்துவமனைகளுக்கு ஹென்றி நோர்மன் பெத்யூனின் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. மேலும், பெத்யூன் நூற்றாண்டு பிறந்த நாளன்று அவரது நினைவாக கனடாவும், சீனாவும் ஒரே நேரத்தில் நினைவு அஞ்சல் தலைகளை வெளியிட்டன.

1972 இல் கனடா அரசாங்கம் பெத்யூனை, “தேசிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கனடியன்” என அறிவித்தது. மேலும், ‘இன் மெமரி ஆப் நோர்மன் பெத்துன்’ (IN MEMORY OF NORMAN BETHUNE) என்ற தலைப்பில் மா சேதுங் எழுதிய கட்டுரை, சீன மக்கள் அனைவரையும் சென்றடைந்தது குறிப்பிடத்தக்கது.

பெத்யூன் தனித்தன்மை வாய்ந்த கனடியர்; ஒரு தனித்தன்மை வாய்ந்த மனிதர். அவர் தனது நாட்டாலும் சமகாலத்து உலகத்தாலும் இப்படி ஒருங்கே வடிவமைக்கப்பட்டார். அடிப்படையில் அவரை நவீன புத்துயிர்ப்பு மனிதர் என்று சொல்லலாம். அவர் தனது அனுபவத்தின் மூலம் தேவையைக் கண்டறிந்து அதை அடைவதற்கு தன்னைச் செலுத்தினார்; அப்படி தன்னைச் செலுத்தி, அனைவருடைய வாழ்க்கையையும் செழுமைப்படுத்த முனைந்தார்.

# ஊழியர்களை பயிற்றுவித்தல் குறித்து லெனின்



ஒரு கம்யூனிஸ்டு கட்சியின் ஊழியரை, முழு நேரப் புரட்சியாளரை தேர்வு செய்வது, அவர்களை நடைமுறை வேலைகளில் ஈடுபடுத்தி, குறைகளைக் களைந்து, மக்களின் தலைசிறந்த ஊழியர்களாக உருவாக்குவது, அவர்களை மக்கள் தலைவர்களாக்குவது என்பது கட்சியின் கடமையாகும். அதற்கு தோழர் லெனின் பின்வரும் நடைமுறைகளை வகுத்துக் கொடுத்துள்ளார்.

ஊழியர்களைத் தேர்வு செய்வதிலும், அவர்களை நடைமுறையில் சோதித்துப் பார்ப்பதிலும்தான் கட்சியின் மிக முக்கிய கடமை அடங்கியுள்ளது. கட்சி வாழ்க்கைக்குத் தேவையானவர்களைத் தேர்ந்தெடுங்கள். பின்பு அவர்களது நடவடிக்கைகளை கண்காணியுங்கள். பின்பு மக்கள் அவர்களை மதிப்பிடுவார்கள்.

மகத்தான உழைக்கும் மக்களின் புரட்சிகரப் போராட்டத்திற்குத் தேவையான தலைவர்கள் – முழுநேரப் புரட்சியாளர்களைத் தயார் செய்யாமல் முதலாளிகளையும், நிலப்பிரபுக்களையும் வெற்றி கொள்ள முடியாது.

முழு நேர ஊழியர் என்பவர் முழு நேர எழுச்சியாளனாக, முழு நேர ஸ்தாபன அமைப்பாளனாக, முழு நேரப் பிரச்சாரகனாக இருக்க வேண்டும்.

மக்களுடன் இடையறாது தொடர்பு கொள்பவர்களாக, தன்னலமற்றுப் புரட்சிக்காகத் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர்களாக, முழு நேர ஊழியர் இருக்க வேண்டும்.

மக்கள் மீது அளப்பரிய நம்பிக்கை கொண்டவர்களாகவும், மக்களின் எல்லையற்ற நம்பிக்கையை பெற்றவர்களாகவும், அவர்கள் திகழ வேண்டும். முழுநேரப் புரட்சியாளர்கள் மக்கள் ஜனநாயக புரட்சிக்கு அவசியமான, உயர்ந்த, தனித்த குணங்களைப் பெற வேண்டும். மற்றவர்களுக்கும் அந்த அறிவினைப் புகட்ட வேண்டும். முன்னோடியாய் திகழ வேண்டும். வெறுமனே ஓர் அமைப்பின் பொறுப்பில் இருக்கக்கூடாது. மாறாக பொது மக்கள் மத்தியில் எப்போதும் ஜொலிக்கக்கூடிய மக்களின் மாமேதையாய் திகழ வேண்டும்.

வர்க்கங்களின் பிரச்சனைகளை ஆய்வு செய்து அவர்களுக்கான கோரிக்கைகளை உருவாக்கிடத் தெரிய வேண்டும். பின்பு அந்தக் கோரிக்கைகளைப் பெற மக்களைத் திரட்டிப் போராட வேண்டும். இதில் வெறும் பொருளாதாரவாதம் மட்டும் என்ற சந்தர்ப்பவாதப் போக்குகளில் வீழ்ந்து மக்களோடு மக்களாய் கலந்து மறைந்துவிடக்கூடாது. பொருளாதாரப் போராட்டங்களை நடத்தும்போது அரசியல் போராட்டத்தையும், புரட்சிக் கல்வி புகட்டுவதையும் விட்டுவிடக்கூடாது.

*எஸ். ஏ. பெருமாள்*

வேலை நேரத்தைக் குறைத்தல், ஊதிய உயர்வு பெறுதல் போன்ற பொருளாதாரக் கோரிக்கைகளோடு மட்டும் நமது நடவடிக்கைகளை மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற வலது திருத்தல்வாதிகளை லெனின் கண்டித்தார்.

தொழிலாளர்கள் மற்றும் உழைப்பாளிகளின் வாழ்வை மேம்படுத்துவதற்கு நாம் பாடுபடவேண்டும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால் நமது முக்கியக் கடமை அரசியல் புரட்சிப் போராட்டமே என்பதை மறந்துவிடக்கூடாது. தொழிலாளர்களைப் படிப்படியாகப் புரட்சிக்காரர்களாக வளர்த்து உயர்த்த வேண்டும். அவர்களை வெறும் பொருளாதார வாதத்தில் வீழ்ந்து கிடக்கும் "தொழிலாளர் மக்கள் திரள்" என்று தரம் சரியும் வகையில் செயல்படுத்தக்கூடாது.

சோதனைகளும், இன்னல்களும் வரும்போதும், துயரங்கள் மேலிடும்போதும் சித்ரவதைகளைத் தாங்கிக் கொள்ளும் மனத்திண்மை வேண்டும். தன்னலமும், பதவிமோகமும் ஒழிக்கப்பட வேண்டும். கட்சியின் நலன்களுக்குக் கேடு விளைவிக்கும் கர்வம் கூடவே கூடாது. கம்யூனிஸ்ட் மமதையை ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது.

ஓர் ஊழியர் திட்டவட்டமான ஸ்தாபனக் கட்டுக்கோப்புக்குள் நிற்க வேண்டும். கடுமையான கட்சிக் கட்டுப்பாடும் பரஸ்பரம் உள்ளார்ந்த இணைப்பும் தேவை. கட்சியின் அனைத்து நடவடிக்கைகளிலும் முழு ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும். அதன் அடிப்படையில் விமர்சனம், சுய விமர்சனம் இருத்தல் வேண்டும். கட்சியின் எல்லா நடவடிக்கைகளிலும் சுறுசுறுப்பாய் ஈடுபட வேண்டும். மக்களின் உண்மையான ஊழியனாக, உண்மையான தலைவனாக தன்னைப் பயிற்றுவித்துக் கொள்ளல் வேண்டும். போதனை மூலமாகவும், சுய பயிற்சி மூலமாகவும் பயிற்சிபெற வேண்டும். சம்பிரதாயமான, சிந்தனையற்ற, கீழ்ப்படிதல்கள் தேவையில்லை. ஆனால் கட்சி எடுக்கும் சரியான முடிவுகளுக்கு கீழ்ப்படிதல் வேண்டும்.

புரட்சிகர ஊழியரின் முதல்பெரும் கடமை புரட்சித் தத்துவ நூல்களைப் படிப்பதாகும். படிப்பதைப் படைப்பாற்றலுடன் படிக்க வேண்டும். படித்ததை ஆழ்ந்து புரிந்து உள்வாங்க வேண்டும். மனிதகுலம் உருவாக்கிய எல்லா அறிவுச் செல்வங்களையும் தனது

அறிவால் எப்போது தனது நினைவாற்றலை ஒருவன் வளமூட்டிக் கொள்கிறானோ, அப்போதுதான் அவன் ஒரு கம்யூனிஸ்டாக முடியும்.

ஏனெனில் ஒரு கம்யூனிஸ்டுக்குச் சாதாரணமான எழுத்தறிவு மட்டுமே போதுமானதல்ல. ஆழ்ந்து கற்கும் அறிவு தேவை. அதேசமயம் எல்லாம் தெரிந்தவர் எனும் ஞானச் செருக்கு நல்ல பலனைத் தராது. தன்னடக்கம் தேவை. ஆனால் கம்யூனிசத்திற்கான அன்றாடப் போராட்டங்களில் தனிப்பட்ட முறையில் நேரடியாய் பங்கேற்காமல் – வேலை செய்யாமல் போராட்டங்களில் ஈடுபடாமல் – வெறும் புத்தக அறிவு என்பது உதவாக் கரையே ஆகும்.

ஒழுக்கமாய் வாழ்தல், நேர்மையாய் இருத்தல், நாணயம், நம்பிக்கையைப் பெறுதல் சமூகத்தால் போற்றுதலுக்குரிய ஒரு கம்யூனிஸ்டின் பண்புகளாகும். மார்க்சியத்தின் உயர்ந்த கோட்பாட்டு நெறிகளில் புதியதை உணரும் தன்மை தெரியவேண்டும். மார்க்சியத்திலிருந்து எவரும் பிறழுவதை சகித்துக் கொள்ளக்கூடாது.

மக்களைக் கவரும் விதத்தில் திறமையுடன் உரையாற்றும் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். மார்க்சீய நூல்களையும், கட்சிப் பிரசுரங்களையும் விநியோகம் செய்ய வேண்டும். செய்திகளைத் திரட்டுவது, செய்திகளைப் பரப்புவது அவசியமாகும். துரோகிகளைக் கண்காணிப்பது, இரகசியங்களை பாதுகாப்பதில் மிகுந்த அக்கறையுடன் இருக்க வேண்டும். நிதி சேகரிக்கும் திறனின்றி ஊழியர் இருக்கக்கூடாது.

மோசமான வாழ்க்கை நிலைமைகளையும், தங்களது கடுமையான இடுப்பை முறிக்கும் வேலைகளையும் பொருட்படுத்தாமல், இடையறாது படித்துக் கொண்டேயிருக்க வேண்டும். தங்களை சுய உணர்வு மிக்க கம்யூனிஸ்டுகளாகவும், தொழிலாளி வர்க்க அறிவுஜீவிகளாகவும், மாற்றிக் கொள்ள வேண்டும். கம்யூனிஸ்ட் குணாம்சத்தையும், இலட்சிய வேட்கையையும் வளர்த்துக் கொள்ளும் மெய்யான வீரர்களாக வளரவேண்டும். ஒவ்வொரு ஜனநாயகப் பிரச்சனையையும் எழுப்புவதிலும், வற்புறுத்துவதிலும், தீர்ப்பதிலும் அனைவரையும் முந்திக் கொண்டு நிற்க வேண்டும். இந்தக் கடமையை நடைமுறையில் மறப்பவன் கம்யூனிஸ்ட் அல்ல.

புரட்சி நடவடிக்கையில் முழு நேரமாக ஈடுபட்டுள்ளவர்கள் ஒவ்வொருவரும் தங்களைப் போன்ற பல நூறு பேர்களை உருவாக்கிப் பயிற்றுவித்து வளர்க்க வேண்டும். அதற்கு முன்பாக முழு நேரப் புரட்சியாளர்கள் பொறுமையோடும், உறுதியோடும், தங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதேசமயம் நமது பக்குவமின்மை காரணமாக முழுநேர ஊழியர்களின் கௌரவத்தைத் தாழ்த்திவிடக்கூடாது. தத்துவ சம்பந்தமான பிரச்சனைகளில் உரமின்மை, உறுதியின்மை, குறுகிய பார்வையுடன் தான்விரும்பும் வேலைகளை மட்டுமே செய்வது என்பது கூடாது.

மக்களைத் திரட்டித் தெருக்களில் இறக்குவது பற்றி வியட்னாமியப் புரட்சித்தலைவர் தோழர் ஹோசிமின் கூறியது இங்கு நினைவு கூரத்தக்கதாகும். ஓர் ஊழியர் ஒரு கிராமத்துக்கு அனுப்பப்பட்டிருந்தார். கொஞ்ச காலம் கழித்து அவர் திரும்பிவந்து ஹோசிமின்னிடம் “அந்த கிராமத்து மக்களைத் திரட்டுவதற்கு வழியே இல்லை. அவர்கள் அனைவரும் புத்தமதப் பழமைவாதிகள். அவர்கள் நாள் முழுக்க தியானம் செய்து கொண்டேயிருக்கிறார்கள்” என்றார். ஹோசிமின் இதைக் கேட்டுவிட்டு அந்த ஊழியரிடம் “நீ திரும்பவும் அந்த கிராமத்துக்கே போ. நீயும் அவர்களோடு தியானம் செய். அவர்களோடு நீரில் மீனைப் போல இரு. அவர்களை தியானத்திலிருந்து மீட்டுவிடலாம்” என்று கூறினார்.

சுரண்டப்பட்டுக் கிடக்கும் மக்களைத் திரட்டுவதற்கு, ஊழியர் கூறிய பிரச்சனைக்கு ஹோசிமின் கூறியது அருமையான பாடமாகும். உன்னிடமுள்ள புரட்சிகர நெருப்பை உனது கடைசி நாள் வரை கொடு என்பதே இதன் பொருளாகும்.

மக்கள் இயக்கங்களை உருவாக்கித் தலைமை தாங்குவதில் குறியாய் இருக்க வேண்டும். தனது சொந்தச் சோம்பல்களுக்கு மக்களின் தன்னியல்புத் தன்மையைச் சாக்காகச் சொல்லக்கூடாது. மக்களின் தலைவராக இருப்பதைவிட, ஒரு வெகுஜன அமைப்பின் தலைவர் போல மட்டும் தான் என்று தோற்றமளிக்கக்கூடாது. நமது எதிரிகளும் கூட மதிக்கத்தக்க, விரிவான, தைரியமான திட்டத்தை உருவாக்கியளிக்கத் திறனின்மை – தானே விரும்பி ஏற்றுள்ள புரட்சித் தொழிலில் – தானே தொழிலாக ஏற்றுக் கொண்டுள்ள கலையில் அரசியலிலும், அரசு யந்திரத்தை எதிர்த்துப் போராடும் கலையில் அனுபவமின்மையும், நயமின்மையும் கூடவே கூடாது. இவர்கள் புரட்சியாளர்கள் அல்ல. படுமோசமான கற்றுக்குட்டிகளே!

நமது பணி மிக விரிவான, முழுதளாவிய பணியாகும். ஆனால் கற்றுக் குட்டிகளின் பணியானது புரட்சித் தொழிலுக்கே அவமானத்தை உண்டாக்குகிறது. ஒரு புரட்சியாளன் தனது புரட்சித் தொழிலைக் கற்றுக் குட்டியின் தரத்துக்குக் கீழிறக்கி விடாமல், ஒரு கற்றுக் குட்டியின் தரத்தைப் புரட்சியாளனின் தரத்திற்கு உயர்த்துவதில் கவனமாக இருத்தல் வேண்டும். இவ்வாறு செயலாற்றத் தகுதியுள்ள புரட்சிகர சக்திகளான முழுநேர ஊழியர்கள் நம்மிடம் போதுமான அளவு இல்லாதிருப்பது வருந்தத்தக்கது ஆகும்.

ஓர் ஊழியர் பலவிதமான திறமைகளைக் கொண்டிருத்தல் அவசியமாகும். ஸ்தாபன அமைப்பாளன், ஈடு இணையற்ற கிளர்ச்சியாளன், வெகுஜனத் தலைவன், வேலைகளுக்குத் திட்டமிட்டுத் தருகிறவன், வேலைகளைத் திட்டமிட்டுச் செய்கிறவனாக இருக்க வேண்டும். கட்சி முடிவுகளை அமுல்படுத்துவது, கண்காணிப்பது, அடுத்த கட்டத்தை நோக்கி நகருவது, தாவுவது வேண்டும்.

மக்களுடன் அதிக அளவில் தொடர்பு கொண்டு அவர்கள் மத்தியில் நல்ல பெயருடன் விளங்கும் புரட்சியாளர்களை உடனே கொமிட்டிக்குக் கொண்டு வரவேண்டும். அனுபவக் குறைவான இளைஞர்களை அதிகமான நடைமுறை ரீதியிலான செயல்களில் ஈடுபடுத்த வேண்டும். அவர்களைச் சும்மா இருக்க விடக்கூடாது. ஆழ்ந்த நடைமுறை ரீதியான காரியங்களுக்கு முழுமையான தயாரிப்பும், பயிற்சியும் அவசியம், ஆனால் ஆரம்பத் தோழர்களுக்கு வேலை கண்டுபிடிப்பது எளிது. இதில் வேலை செய்பவர்கள் வெட்டிப் பேச்சாளர்களைப் பிரித்துப் பார்க்காவிடில் தீமை விளையும்.

ஒவ்வொரு ஊழியரும் கட்சிக்குப் பொறுப்பானவர். கட்சியும் ஒவ்வொரு

ஊழியருக்கும் பொறுப்பானதாகும். கட்சி வளர்ச்சி, அரசியல் புரட்சியின் மீது அக்கறை இவற்றைப் பின்தள்ளிவிட்டு தன்னலம், பொறாமை, கருத்து வேற்றுமைகள், குழுவாதம், கோஷ்டிப் பிளவுகள் ஆகியவற்றை தீவிர கண்காணிப்புக்கும், உடனடியாகக் களைவதற்கும் தயாராயிருக்க வேண்டும்.

பழைய தோழர்கள் புதிய தோழர்களிடம் இறக்கிவிடும சரக்கு பற்றி உஷார் தன்மை வேண்டும். அதில் எச்சரிக்கை உணர்வோடு கற்றுக் கொள்ளப்பட வேண்டியவை - நிராகரித்து தூக்கி எறியப்பட வேண்டியவை எனப் பிரித்துப் பார்த்துக் கற்றுக் கொள்ள வேண்டும். தோழர்களின் தனிப்பட்ட சிறப்பியல்களையும், அவர்களது பலத்தையும் பலவீனத்தையும் அறிந்து வைத்திருக்க வேண்டும். அவர்களது வெற்றிகளையும் தோல்விகளையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

ஊழியர்களின் தகுதிக்கேற்ப கமிட்டிப் பொறுப்புகளுக்கு அவர்களை உயர்த்த வேண்டும். ''நிறைய வெளிச்சம் பரவட்டும். நமக்கு மிகப்பெரிய இசை நிகழ்ச்சி தேவை. அதற்கு இசை கருவிகளை இயக்கும் பணியைப் பகிர்ந்தளிக்க வேண்டும். ஒருவருக்கு உணர்ச்சிபூர்வமான வயலின், மற்றொருவருக்கு ட்ரம், மூன்றாமவருக்கு இயக்குநருக்கான குச்சியைத் தர வேண்டும். இந்த வேலைப் பிரிவினைக்கான அனுபவத்தை நாம் பெற வேண்டும். அசைவின்மை, பதவிகளை வழிபடுதல் ஆகியவற்றின் எல்லாப் பழைய பழக்க வழக்கங்களையும் தூக்கி எறிய வேண்டும்.

இளைஞர்களையும், மாணவர்களையும் அஞ்சாது கமிட்டிகளில் சேருங்கள். தவறுகள் ஏற்பட்டால் ஒன்றும் மோசம் போய்விடாது. அவர்களது அனுபவமின்மை, தயாரிப்பின்மை, வளர்ச்சியின்மை குறித்து கவலைப்படாதீர்கள். அவர்கள் இளந்தளிர்களாய் இருப்பது கண்டு விம்ம வேண்டாம். அவர்கள் வந்து வேலைகளில் ஈடுபடட்டும். தவறுகளை நாம் நாசூக்காய் திருத்திவிடலாம்.


அறிவுத்துறையினரைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். அவர்கள் ஒவ்வொருவரும் முடிந்த அளவு அவர்களது அறிவுத் திறனுக்கேற்ப செயல்பட ஏற்பாடு செய்ய வேண்டும்.

மக்கள் மத்தியில் ஏராளமான தனி ஆற்றல் படைத்த அமைப்பாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கேவலமாக அடக்கப்பட்டுக் கிடக்கிறார்கள். அவர்களைக் கட்சிக்குள் கொண்டு வந்து, அவர்களது ஆற்றலைப் பயன்படுத்த வாய்ப்பளிக்க வேண்டும். மக்களைத் திரட்டிப் போராடுவதற்குக் கிடைக்கும் சிறிய சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தும் அணுகுமுறை அனைவருக்கும் வரவேண்டும்.

எந்த விசயத்தையும், இயக்கத்தையும் மிகைப்படுத்தலும், சிறுமைப்படுத்தலும் கூடாது. டாம்பீகமும், இழிநிலையும் – பவிசும், பஞ்சப் பாட்டும் கூடவே கூடாது. ஒடுக்கப்பட்ட மக்கள் திரளிலிருந்து ஊழியர்களைத் தேர்வு செய்து கொண்டு வருவதில் தனித்த அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும்.

உடற்பயிற்சியும், மனப்பயிற்சியும் மிகவும் அவசியமாகும். தாழ்வு மனப்பான்மையும் உயர்வு மனப்பான்மையும் வரவே கூடாது. ஒளிந்து மறையும் குணமும், உறுதியற்ற நிலையும் கூடாது. போராடுவதற்கும் கற்றுக் கொள்ள வேண்டும். கற்றுக் கொள்வதற்கும் போராட வேண்டும். நமது கட்சி எதற்கும் தயாரானதாகும். எதற்கும் தயாரானவர்களாய் நாம் திகழ வேண்டும்.

# தன்னலமற்ற மருத்துவர் பெத்யூன்



தன்னலமற்ற மருத்துவ சேவையாற்றிய ஹென்றி நோர்மன் பெத்யூன் (Henry Norman Bethune) *1890* மார்ச் *3* அன்று கனடாவில் பிறந்தார். *1914* இல் முதலாவது உலகப் போர் வெடித்த பிறகு, ரோயல் கனடியன் இராணுவத்தின் மருத்துவப் படையில் சேர்வதற்காக படிப்பை பாதியில் நிறுத்தினார்.

திருமணத்திற்குப் பிறகு அமெரிக்காவின் மிச்சிகனில் குடியேறி, அங்கு மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை கல்லூரியில் பயிற்றுவிப்பாளராக பணியாற்றினார். இக்காலக் கட்டத்தில் காசநோயால் பாதிக்கப்பட்ட பெத்யூன், ஆபத்தான அறுவை சிகிச்சைக்குப் பிறகு உடல் நலம் தேறினார்.

உயர் பயிற்சி பெற்ற நெஞ்சக நோய் அறுவை சிகிச்சை நிபுணராக திகழ்ந்தார் பெத்யூன். மருத்துவப் பராமரிப்பு மற்றும் சுகாதார சேவைகளில் தீவிர சீர்திருத்தங்களை முன்மொழிந்த இவர், இலவச கிளினிக் திறந்து மருத்துவ சேவையாற்றினார்.

*1936* இல் கனடா கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார் பெத்யூன். ஸ்பெயின் உள்நாட்டுப் போர் வெடித்த சிறிது காலத்தில், ஸ்பெயின் குடியரசு அரசாங்கத்திற்கு சேவையாற்றினார். போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு, விரைவாக இரத்தம் வழங்க, நடமாடும் இரத்த மாற்ற சேவைகளை அமைத்தார். இவரது இந்த சேவை பல உயிர்களைக் காப்பாற்றியது.

இந்நிலையில், ஜப்பானிய படையெடுப்பின்கீழ் இருந்த சீனாவுக்குப் பயணிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அங்கு, சீனப் புரட்சியாளர் மா சேதுங் தலைமையிலான சீனக் கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்தார். *1939* இல் ஜின்–ஜா–ஜி (Jin-Cha-Ji) இராணுவ மாவட்டத்திற்கான மருத்துவ ஆலோசகராக பெத்யூன் நியமிக்கப்பட்டார். பல மாதங்களில், மேற்கு பெய்ஜிங் பகுதி முழுவதும் தற்காலிக மருத்துவமனைகளை உருவாக்கி, தனது நடமாடும் மருத்துவக் குழுவுடன் மலைப் பகுதிகளுக்கு குதிரையில் சென்று சேவையாற்றினார்.

இடைவிடாது உழைத்ததால், பெத்யூனின் உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டு, *1939* நவம்பர் *12* அன்று

**தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க...**

முன்பக்கத்தொடர்ச்சி...

பதவிக்கு வந்த தனது மாமனார் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் (அரசியல் குள்ளநரி என விமர்சிக்கப்படுபவர்) பொருளாதாரக் கொள்கைகளையும் பின்பற்றியிருந்தால் நாடு இன்றைய பொருளாதார நெருக்கடி நிலையை அடைந்திருக்காது என்று குறிப்பிட்டிருக்கிறார். எனவே, ரணிலின் கடந்தகால அரசாங்கங்கள் பற்றிய விமர்சனம் போலியானது அல்லது பக்கச்சார்பானது என்று ஆகிறது.

ஆனால், ஒரு உண்மையை அவர் வெளிப்படையாகக் கூறியிருக்கிறார். அதாவது, அரச நிறுவனங்கள் நஸ்டமடையும் போது, அவை வங்கிகளிடம் இருந்து கடனாகப் பணத்தைப் பெறுகின்றன. அப்படிப் பெறும் பணத்தை திரும்பச் செலுத்தாத போது கடன் கொடுத்த வங்கிகள் திவால் நிலையை அடைகின்றன. அந்த நேரத்தில் வங்கிகள் திவால் அடையாமல் இருப்பதற்கு அரசாங்கம் பணம் கொடுத்து உதவுகின்றது. (இது இலங்கைக்கு மட்டும் உரியது அல்ல. அமெரிக்கா உட்பட முழு மேற்குலக முதலாளித்துவ நாடுகளுக்கும் உரியது) ஆனால் வங்கிகளைக் கைதூக்கி விடும் அளவுக்கு அரசாங்கத்துக்கு அவ்வளவு தொகை பணம் எங்கிருந்து வருகிறது என்பதுதான் கேள்வி.

ஏனெனில், அரசாங்கத்தின் வருவாய் செலவை விடக் குறைவாக இருக்கும் போது அரசாங்கத்திடம் ஏது பணம்? எனவே அரசாங்கம் வெளிநாடுகளில் வட்டிக்குப் பணம் வாங்குகிறது. அப்படிப் பணம் வாங்க முடியாத போது நாணயத் தாள்களை அச்சிடுகிறது. அப்படி அச்சிடும் போது உற்பத்தியை மிஞ்சிய பணம் புழக்கத்துக்கு வருகிறது. அதாவது, பொருள் உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்படாமல் இருக்கும் போது, இருக்கிற பொருளை வாங்குவதற்கு அதிக பணம் சந்தையில் போட்டி போடுகிறது. அதனால் விலைவாசி உயர்வும் பணவீக்கமும் ஏற்படுகின்றது.

தற்போது அவர் சமர்ப்பித்துள்ள வரவு செலவுத் திட்டத்தில் கூட, நாட்டின் மொத்த தேசிய வருமானம் 2410 பில்லியன் ரூபாவாக இருக்கையில், செலவு 3415 பில்லியன் ரூபாவாக இருக்கின்றது எனக் குறிப்பிட்டிருக்கிறார். அதாவது, வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகை (பற்றாக்குறை) 1005 பில்லியன் ரூபாவாகும். இந்தத் தொகையை எவ்வாறு பெற்று செலவை ஈடுகட்டப் போகிறோம் என்பதை அவர் தனது உரையில் குறிப்பிடவில்லை.

தேசிய வருவாயை அதிகரிப்பதற்கு அவர் ஆலோசனைகள் எதையும் முன்வைக்காததால் (குறைந்தபட்சம் எதிர்பார்ப்புகளையேனும் முன்வைக்காததால்), பின்வரும் மூன்று வழிகளைத்தான் அரசு நாடும் என எதிர்பார்க்கலாம்.

ஒன்று, வரி அதிகரிப்பு (செட்டி நஸ்டம் ஊர் மேலே என்பது போல, வரி அதிகரிப்பு இறுதியில் பொதுமக்கள் தலையில்தான் சுமத்தப்படும்)

இரண்டாவது, அந்நியக் கடன்களை மேலும் பெறுவது.

மூன்றாவது, நாணயத்தாள்களை மேலதிகமாக அச்சிடுவது.

ஆனால் இந்த மூன்று வழிகளில் எதைக் கையாண்டாலும், நாட்டினதும் மக்களினதும் பொருளாதார நிலை மேலும் அதள பாதாளத்தை நோக்கியே செல்லும். என்பதுதான் உண்மை. ஜனாதிபதியின் வரவு செலவுத் திட்ட உரையில் இன்னுமொரு கவனிக்க வேண்டிய விடயம் உள்ளது. அதாவது, தான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர் நாட்டில் முன்பிருந்த மோசமான பொருளாதார நிலை படிப்படியாகச் சீரடைந்து வருவதாக பேசியிருக்கிறார். அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்காக மக்கள் மணிக்கணக்கில் நீண்ட வரிசைகளில் காத்திருந்த சூழலை தான் இல்லாதொழித்ததாகவும் அவர் பெருமை பேசியிருக்கிறார். அவர் சொல்வதில் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கிறது.

இருப்பினும், நாட்டின் தேசிய வருமானத்தை அதிகரிக்காமல் எப்படி அவரால் பொருளாதார ஸ்திர நிலையை ஏற்படுத்த முடிந்தது என்ற இரகசியத்தை அவர் தனது பேச்சில் வெளிப்படுத்தவில்லை. உண்மை என்னவென்றால், சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களிடம் புதிதாகக் கடன்களைப் பெற்றும், ஏற்கெனவே கடன் பெற்ற நாடுகள் அல்லது நிறுவனங்களிடம் கெஞ்சிக் கேட்டு கடன் மறுசீரமைப்புச் செய்துமே இன்றைய பொருளாதார 'ஸ்திர' நிலையை ரணிலின் (ராஜபக்சாக்களினதும்தான்) அரசாங்கம் ஏற்படுத்த முடிந்தது என்பதுதான் யதார்த்தம்.

ஜனாதிபதியின் வரவு செலவுத் திட்ட உரையில், பல்வேறு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதாவது, பல்வேறு துறைகளை மறுசீரமைப்புச் செய்ய வேண்டியதின் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார். இன்றைய சர்வதேச நிலைமைகளுக்கு ஏற்பவும், விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்பவும் நிறுவனங்கள் சீரமைக்கப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். அவரது கூற்று ஏற்கத்தக்கதே. ஆனால், அவர் சொல்லும் சீரமைப்பு எத்தகையது என்பதே கேள்வி. அதுபற்றி அவர் எதுவுமே குறிப்பிடவில்லை.

ஆனால் கடந்த சில மாதங்களாக அரச நிறுவனங்கள் நஸ்டத்தில் இயங்குகின்றன என அவர் சொல்லி வருவதைப் பார்க்கும் போது, பல முக்கியமான அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்துவதின் மூலமே நஸ்டத்தைத் தவிர்க்கலாம் என அவர் கருதுவதாகத் தெரிகிறது. நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு தனியார்துறையையும் ஊக்குவிப்பது அவசியம் என்ற போதிலும், நாட்டின் பொது வளங்களை முழுவதுமாகத் தனியார்மயப்படுத்துவது பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

அவர் தனது உரையில் குறிப்பிட்ட இன்னொரு விடயமும் கவனத்துக்குரியது. அதாவது, நாட்டின் மொத்த தேசிய வருமானத்தில் 35 சதவீதம் அரச ஊழியர்களின் சம்பளத்துக்கும், நலன்புரி நடவடிக்கைகளுக்கும் செலவாகின்றது எனக் குறிப்பிட்டிருக்கிறார். இதில் நலன்புரி நடவடிக்கைகள் தவிர்க்க முடியாதது. ஏனெனில், அரசாங்கங்களின் தவறான நடவடிக்கைகளால் யுத்தம், வறுமை, நோய்கள், இயற்கை அழிவு போன்றன ஏற்பட்டு, அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படுவது அவசியம்.

ஆனால் இலங்கை போன்ற சுமார் 2 கோடி மக்கள் தொகை கொண்ட ஒரு நாட்டுக்கு 1.3 மில்லியன் (13 இலட்சம்) அரச ஊழியர்கள் தேவைதானா என்பது சிந்திக்க வேண்டிய ஒரு விடயம்.

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

# மனித உரிமைகள் குறித்து மேற்குலகின் இரட்டை நிலைப்பாடு

– ரணில் விக்கிரமசிங்க

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றுகையில், தெற்காசிய தீவு நாடான இலங்கைக்கும் பலஸ்தீனத்திற்கும் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகினர் என்ன செய்தார்கள் என்பதை மேற்கோள் காட்டி, மனித உரிமைகள் தொடர்பாக அவர்களின் இரட்டை நிலைப்பாடுகளை கடுமையாக சாடியுள்ளார், ஏற்கனவே பலஸ்தீனத்தில் குழந்தைகள் உட்பட 11,000 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

கடந்த ஏழு தசாப்தங்களில் இஸ்ரேலியர்களின் படிப்படியான ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து, காஸா பகுதியில் பல்லாயிரக்கணக்கான பூர்வீக பலஸ்தீனியர்கள் சுற்றி வளைக்கப்பட்டுள்ளனர். பலஸ்தீன போராளிக் குழுவான ஹமாஸ் ஒக்ரோபர் 7ந் திகதி அன்று நடத்திய திடீர் தாக்குதலுக்குப் பின்னர், காஸா மீது இஸ்ரேல் இராணுவம் குண்டு வீசி வருகின்றது.

அமெரிக்கா, கனடா மற்றும் பிரித்தானியா தலைமையிலான மேற்கத்திய நாடுகள் இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் குறித்து கவலைகளை எழுப்பி வரும் நிலையில், மேற்கத்திய சார்பு தலைவராக பார்க்கப்படும் விக்கிரமசிங்கவின் இந்த விமர்சன கருத்துக்கள் வந்துள்ளன.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீன ஹமாஸ் போராளிகளுக்கும் இடையிலான மோதலில் மனிதாபிமான உதவிகள் காஸாவை சென்றடைவதனை அனுமதிக்கும் போர் இடைநிறுத்தங்களுக்கு அழைப்பு விடுக்கும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் தீர்மானமொன்றினை அமெரிக்கா கடந்த மாதம் வீட்டோ மூலம் நிராகரித்தது.

அப்போதிருந்து, மருத்துவமனைகள் உட்பட இஸ்ரேலின் கண்மூடித்தனமான குண்டுவீச்சால் ஆயிரக்கணக்கான பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

'மேற்கத்திய நாடுகள் ஏன் இவ்வாறாக நடந்து கொள்கிறார்கள்? கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம், இலங்கைக்கு எதிரான தீர்மானமொன்றினை, அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றினார்கள்' என்று நவம்பர் 3ந் திகதி ஊவா மாகாண நகரமான வெலிமடையில் நீதிமன்ற வளாகத்தை திறந்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

'இலங்கைக்கு எதிராக தீர்மானத்தைக் கொண்டு வந்த நாடாகிய கனடா, இம்முறை ஐ.நாவில் கொண்டு வரப்பட்ட காஸா போர் நிறுத்தத் தீர்மானத்தில் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கின்றது. இந்தவகையான தீர்மானங்களை ஐ.நாவில் கொண்டு வரும் அடியாளாக இப்போது கனடா வந்துள்ளது. எங்கள் நாட்டுக்கு எதிராக தீர்மானமொன்று கொண்டு வந்து அவர்களால் நிறைவேற்றப்படும். நாங்கள் அனைவரும் அதனை பின்பற்ற வேண்டும்' என்றார்.

அமெரிக்கா, கனடா மற்றும் பிரித்தானியா போன்ற மேற்கத்தைய நாடுகள், இலங்கையில் 2009 இல் முடிவடைந்த 26 ஆண்டுகால போரின் இறுதிக் கட்டத்தில் நடந்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்களை விசாரிப்பதற்கான தொடர்ச்சியான தீர்மானங்களை ஆதரிப்பதோடு, கடந்த கால மனித உரிமை மீறல்களை நிவர்த்தி செய்யுமாறும், சிறுபான்மையினரின் உரிமைகளை நிலைநிறுத்தக் கோரியும், ஆட்சியில் அமர்ந்திருக்கும் இலங்கை அரசாங்கங்களுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகின்றன.

'எங்கள் மீது எதனைப் பிரயோகிக்கின்றீர்களோ, அதனை காஸாவிலும் இஸ்ரேலுக்கு எதிராக பிரயோகிக்க வேண்டும். அமெரிக்கா எங்களிடம் என்ன தெரிவித்து வருகிறார்களோ, அது காஸாவில் அமுல்படுத்தப்படுவதையும் அவர்கள் உறுதி செய்ய வேண்டும். உலகில் இப்போது இரண்டு வெவ்வேறு விதமான ஒழுங்கு முறைகள் இருக்கின்றன,' என்று ஜனாதிபதி கூறினார்.

'எனவே, இங்கே, காஸாவில், முஸ்லிம் மக்களின் கவலைகளை கருத்திலெடுக்க வேண்டும் என்று உங்களிடம் கேட்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. நீங்கள் சொல்வதை இலங்கை அரசு கட்டாயமாக கருத்திலெடுக்க வேண்டும் என்றால், காஸாவில் எதற்கு இன்னொரு நடைமுறை?'



'பலஸ்தீனியர்கள் அனைவரும் முஸ்லிம்கள், அவர்கள் அனைவரும் தங்கள் சொந்த இடத்தில் ஓரங்கட்டப்பட்டுள்ளனர். அதனால், அமெரிக்காவிடம் நான் கேட்கிறேன், அவர்கள் ஏன் இதனை எங்களுக்குப் பிரயோகிக்கின்றார்கள், ஆனால் காஸாவில் அல்ல?' என்று ஜனாதிபதி கேள்விகளை எழுப்பினார்.

---

14ம் பக்கத்தொடர்ச்சி...

நாட்டை நீண்டகால நோக்கில் பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுவிப்பதனால், ஒரு சரியான தேசிய உற்பத்திக் கொள்கையை வகுப்பது அவசியம். குறிப்பாக நாட்டின் தேசிய உற்பத்தியில் பெரும் பங்கு வகிக்கும் விவசாயம், பெருந்தோட்டத் தொழில், மீன்பிடித் தொழில், சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்கள் என்பனவற்றை வளர்ப்பதற்கான தேசிய நிகழ்ச்சி நிரல் தேவை. ஆனால், சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தில் இந்தத் துறைகளுக்கு போதிய நிதி ஒதுக்கப்படவில்லை. அப்படியிருக்க, எவ்வாறு தேசிய வருவாய் அதிகரிக்கும்? இப்படியே போனால், அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகை தற்போதையதை விட மேலும் அதிகமாக இருக்கும்.

போகிற போக்கைப் பார்த்தால் தொடர்ந்தும் 'கடன் வாங்கித்தான் கலியாணம் நடைபெறும்' போலத் தோன்றுகிறது.

அடுத்த வரவு செலவுத் திட்டம் வரை ஓராண்டு பொறுத்திருந்து பார்பபோம்.

# அமெரிக்க நாடாளுமன்றத்தில் ஒலிக்கும் ஒற்றைக் குரல்!

**கா**ஸா மீதான இஸ்ரேலின் போர் வெறித் தாக்குதலை விமர்சித்து கருத்து தெரிவித்ததற்காக ரஷிதா ட்லைப் (Rashida Tlaib) என்ற பலஸ்தீன வம்சாவளி அமெரிக்க பெண் நாடாளுமன்ற உறுப்பினரை தணிக்கை செய்யும் கண்டன தீர்மானத்தை அமெரிக்க காங்கிரஸ் (அமெரிக்க நாடாளுமன்றம்) நவம்பர் 7 அன்று நிறைவேற்றியது.

வேடிக்கை என்னவென்றால் அவர் சார்ந்துள்ள ஜனநாயகக் கட்சியின் 22 உறுப்பினர்களும் குடியரசு கட்சியின் பெரும்பான்மையினரும் இணைந்து அவருக்கு எதிராக வாக்களித்துள்ளனர். ரஷிதாவுக்கு எதிராக வாக்களித்த ஜனநாயக கட்சி உறுப்பினர்கள் இஸ்ரேல் ஆதரவு குழுக்களிடமிருந்து போதுமானளவு நன்கொடையைப் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பலஸ்தீன ஆதரவு இயக்கமும் சபையில் உள்ள முற்போக்கு உறுப்பினர்களும் இந்த தணிக்கைக்கு எதிராக கண்டன குரல் எழுப்புகின்றனர். எங்களுடைய சக உறுப்பினர்கள், சபையின் ஒரே ஒரு பலஸ்தீன அமெரிக்க பிரதிநிதியின் குரலை ஒடுக்க முயல்வது மூர்க்கத்தனமானது என்றும் தங்கள் எதிர்ப்பை வெளியிட்டனர்.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் 'தணிக்கை' என்பது அடிப்படையில் பொது அவமானத்தின் ஒரு வடிவமாகும். சட்ட மியற்றும் அதிகாரம் படைத்துள்ள ஓர் உறுப்பினரை சபாநாயகர் கண்டிப்பதாகும். அமெரிக்க காங்கிரஸின் வரலாற்றில் இது மிகவும் அரிதாக நடக்கின்ற ஒரு நிகழ்வு.

**இது இரண்டாவது தணிக்கை தீர்மானம்!**

ரஷிதா ட்லைப் சந்திக்கும் இரண்டாவது தணிக்கை தீர்மானம் இது. இவர் யூதர்களுக்கு எதிரான வெறித்தனத்தை ஆதரிப்பதாக குற்றம் சாட்டி கடந்த வாரம் குடியரசுக் கட்சியின் உறுப்பினர் மர்ஜோரி டைலர் கிரீன், ட்லைப் மீது தணிக்கையை அறிமுகப்படுத்தினார். ஆனால் அப்பொழுது அதை நிறைவேற்ற முடியவில்லை. நவம்பர் 7 அன்று ஜோர்ஜியாவின் ரிச் மெக்கார்மிக் (Rich McCormick) என்ற குடியரசுக்கட்சி உறுப்பினர் கொண்டுவந்த தணிக்கை தீர்மானம் நிறைவேறியது. மிகவும் குழப்பமாக நடைபெற்ற புதிய சபாநாயகர் மைக் ஜோன்சனின் தேர்வுக்கு பிறகு தான் இந்த தணிக்கை நிறைவேறியுள்ளது என்பது குறிப்பிடத்



Rashida Tlaib

தகுந்ததாகும். 234 வாக்குகள் ஆதரித்தும், 138 வாக்குகள் எதிர்த்தும் பதிவாகியுள்ளன.

இஸ்ரேல் அரசை நிர்மூலமாக்கிட முடிவு செய்துள்ள ஹமாஸ் இயக்கத்தின் அறை கூவல்களை இவர் ஆதரிப்பதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பலஸ்தீன மக்கள் இனப்படுகொலை செய்யப்படுவதை அமெரிக்க அதிபர் பைடன் ஆதரிப்பதாக குற்றம் சாட்டி ஒரு வீடியோவை அவர் கடந்த வாரம் வெளியிட்டார். ஜனநாயக கட்சியின் சக உறுப்பினர்களுக்கு இது ஆத்திரமூட்டியது.

*சுகுமாரன்*

அமெரிக்க காங்கிரஸின் ஒரேயொரு பலஸ்தீன அமெரிக்க உறுப்பினராக என்னுடைய கருத்துக்கள் மிகவும் முக்கியமானது. இதனை யூத எதிர்ப்பு என குற்றம் சாட்டுவதை நான் ஏற்கும் பேச்சுக்கே இடமில்லை என குறிப்பிட்டார். தன்னுடைய கருத்துக்கள் இஸ்ரேலிய அரசாங்கத்திற்கு குறிப்பாக பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவின் போர் வெறிக்கு எதிரானது.

இதனை யூதர்களுக்கு எதிரான வெறி என பிரச்சாரம் செய்வது மிகுந்த ஆபத்தானது என்றும் பேசியுள்ளார்.

**யார் இந்த ரஷிதா ட்லைப்?**

டெட்ராய்ட் (Detroit) நகரில் குடியேறிய பலஸ்தீன பெற்றோருடைய மகள். வழக்கறிஞராக தன் வாழ்க்கையை துவக்கியவர். மிச்சிகன் (Michigan) மாகாண சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இஸ்லாமிய பெண்மணி. அமெரிக்க காங்கிரஸின் முதல் இரண்டு முஸ்லிம் பெண்களில் ஒருவர். 2014 வரை முதியோருக்கான இலவச சுகாதார கிளினிக்குகள் மற்றும் மீல்ஸ் ஆன் வீல்ஸ் (Meals on Wheels) திட்டங்களுக்கு பல மில்லியன் டொலர்களை திரட்டுவதில் உதவியவர்.

**நதியிலிருந்து கடல் வரை!**

நேதன்யாகுவின் லிகுத் கட்சி, ஜோர்டான் நதிக்கும் மத்தியதரைக் கடலுக்கும் இடையிலான பகுதி முழுமையும் இஸ்ரேலிய இறையாண்மைக்கு உட்பட்டது என்று வரையறுக்கிறது. இதற்கு எதிராகத்தான் ஜோர்டான் நதியிலிருந்து கடல் வரை சுதந்திர பலஸ்தீனம் என்ற இயக்கத்தை ரஷீதா துவக்கினார்.

இது இஸ்ரேல் அரசை அகற்றுவதற்கான முழக்கம் மட்டுமல்ல. சுதந்திரம், மனித உரிமைகள் மற்றும் அமைதியான சக வாழ்வுக்கு ஏற்ப உணர்வுகளை வெளிப்படுத்தும் அழைப்பும் ஆகும். காலனிய எதிர்ப்பு இயக்கத்தில் இதன் வேர்கள் ஆழமாக வேரூன்றி உள்ளன என்றும் தெளிவுபடுத்துகிறார்.

'நான் அமைதியாக இருக்கப் போவதில்லை, என் வார்த்தைகளை உங்களால் சிதைத்து விட முடியாது, நம்முடைய தேசம் முழுவதும் எழும் மனித உரிமைக்கான எண்ணற்ற குரல்களை உங்களால் ஒடுக்கி விட முடியாது' என அமெரிக்க அரசை நோக்கி சவால் விடுகிறார்.

**போர் நிறுத்தம், அமைதி வேண்டும்!**

'போர் நிறுத்தம் மற்றும் வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு அழைப்பு விடுக்கும் யூத ஆதரவாளர்களுடன் ஒற்றுமையாக நான் நிற்பதில் பெருமைப்படுகிறேன். எந்தவோர் அடக்குமுறைக்கும் அஞ்சமாட்டேன். என்னை அவமானப்படுத்தவும் முடியாது. என் குரலை அடக்கி என்னை மௌனமாக்கவும் முடியாது' என்று ரஷீத் கர்ஜிக்கிறார்.

இராணுவ விதிகள் எதையும் பின்பற்ற தேவையில்லை. வாகனங்களை நிறுத்தும் ''பார்க்கிங்'' இடமாக காஸாவை மாற்றுங்கள் என இஸ்ரேலை அமெரிக்க பிரதிநிதிகள் கொம்பு சீவி விடுகின்றார்கள். காஸாவை தவிடு பொடியாக்க வேண்டும் என்று குடியரசு கட்சியை சேர்ந்த உறுப்பினர்கள் லின்ட்ஸே கிரஹம் (Lindsey Graham) மற்றும் மக்ஸ் மில்லர் (Max Miller) ஆகியோர் விஷம் கக்கிவருகின்றனர். இந்த நிலையில் ஒற்றைக் குரலாக இருந்தாலும் ஒடுக்க முடியாத குரலாக ரஷீதா ட்லைப்பின் குரல் ஓங்கி ஒலிக்கிறது.